




30.01.2025 - வியாழக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 80 குரோதி வருடம் தை மாதம் 17 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 29 பக்கங்கள் - 12








# அர்ச்சுனா எம்.பி யாழில் கைது

(கனுஷியா புஷ்பகுமார்)

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா யாழ்ப்பாணம் – சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் வைத்து அனுராதபுர பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார். பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கே.பி. மனதுங்க தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி இரவு அனுராதபுரம் பகுதியில் போக்குவரத்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு (தொடர்ச்சி...) 02

## அரசின் அறிவிப்பு சட்டத்திற்கு முரண்



( நூருல் ஹுதா உமர் )

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அறிவித்தது ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் முரணானது என்று நாங்கள் கருதுகிறோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடக அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. (தொடர்ச்சி...) 02

## உள்ளூராட்சி தேர்தலில் ஒன்றிணையும் கட்சிகள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சர்வஜன பலய மற்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்க முன்னிலையான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் குழுவில் சிலர் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஒன்றாக இணைந்து போட்டியிட தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த மூன்று கட்சிக ளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் (தொடர்ச்சி...) 02

## இந்திய மீனவர்களே பதற்றத்துக்கு காரணம்



( பு.கஜிந்தன் )

இந்திய மீனவர்கள் தமது கடற் பரப்பை தாண்டி இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறி உள் நுழைவதே அனர்த்தங்களுக்கு வழி வகுப்பதாக யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்தொழில் நீர்வளத் துறை அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார். (தொடர்ச்சி...) 02

## ராஜபக்ச குடும்பத்திற்கு எதிராக அரசியல் வேட்டை

### நாமல் குற்றச்சாட்டு



(கனுஷியா புஷ்பகுமார்)

தற்போதைய அரசாங்கம் ராஜபக்ச குடும்பத்திற்கு எதிராக அரசியல் வேட்டையைத் தொடங்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கூறியுள்ளார்.

கிரிஷ் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக சட்டமா அதிபரின் குற்றப்பத்திரிகை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். இந்த வழக்கு அரசாங்கத்தின் தோல்வியைக் காட்டுகிறது என்றும், விரைவில் உண்மை வெல்லும் (தொடர்ச்சி...) 02

## எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் சந்திப்பு



நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் குரலை மேலும் மேலோங்கச் செய்து, வலுவான எதிர்க்கட்சியைக்கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் கூடினர். நாடாளுமன்றத்திற்குஉள்ளேயும் வெளியேயும் பலமான எதிர்க்கட்சியை உருவாக்கி, மக்களின் பிரச்சினைகளை (தொடர்ச்சி...) 02

# மன நிலையை மாற்றாமல் நாட்டை முன்னேற்ற முடியாது

### வரவு - செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவுக்காக பாரிய தொகை ஒதுக்கீடு

### தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.1,700 நாளாந்த சம்பளம் வழங்கத் தவறும் நிறுவனங்கள்



எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில்மூலதனச் செலவினமாக 1.35 டிரில்லியன்ரூபாயை ஒதுக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும், இது அண்மைக் காலத்தில் மூலதனச் செலவினங்களுக்காக ஒரு அரசாங்கம் செலவிடும் மிகப்பெரிய தொகையாகும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று முன்தினம் (28) பிற்பகல் நடைபெற்ற2025 பொருளாதார உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

” பொருளாதார நிலைமாற்றம்” என்ற தொனிப்பொருளில் இலங்கை வர்த்தக சபை (தொடர்ச்சி...) 02

## பீடாதிபதி ரகுராம் இன்று மீண்டும் பதவியேற்பு



(கனுஷியா புஷ்பகுமார்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் மீண்டும் இன்று பதவியேற்கவுள்ளதாக பல்கலைக்கழக பேரவையால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவையின் விசேட பொதுக் குழுக் கூட்டம் (தொடர்ச்சி...) 02

## போராட்டத்துக்கு தயாராகும் அரிசி மொத்த வியாபாரிகள்

(கனுஷியா புஷ்பகுமார்)

அரிசி தொடர்பான பிரச்சினைக்குரிய நிலைமைக்கு தீர்வுகளை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக அரிசி விற்பனையிலிருந்து விலகி போராட்டத்தில் ஈடுபட அரிசி மொத்த வியாபாரிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாககொழும்பு கோட்டை அரிசி வியாபாரிகள் தெரிவித்தனர். நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகளின் சோதனைகள் அரிசி வியாபாரத்திற்கு ஒரு தடையாக இருந்தது.

அரசாங்கம் அரிசி பிரச்சினைக்கு சரியான தீர்வை வழங்கிய பின்னர், நுகர்வோர் விவகார (தொடர்ச்சி...) 02

## சீறிப்பாயும் இந்திய விண்கலம்



இஸ்ரோவின் 100ஆவது விண்கலமான என்விஎஸ்-02 செயற்கைக்கோள் நேற்று ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி நிலையத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவப்பட்டபோது...

## நாடாளுமன்றம் பெப்.5 - 7 வரை கூடும்

நாடாளுமன்றம் பெப்ரவரி 05ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரை கூடவிருப்பதாகப் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். கடந்த 23ஆம் திகதி சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே (தொடர்ச்சி...) 02

## நெல்லுக்கான உத்தரவாத விலை தாமதமாவது ஏன்?



(கனுஷியா புஷ்பகுமார்)

கிழக்கு மாகாணத்தில் நெல் அறுவடை ஆரம்பித்து விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் எனினும் அரசாங்கம் இன்னமும் நெல்லுக்கான (தொடர்ச்சி...) 02

## கொள்கலன் நெரிசலுக்கு விரைவில் தீர்வு- சுங்கம்

(கனுஷியா புஷ்பகுமார்)

துறைமுகத்தில் தற்போது நிலவும் கொள்கலன் நெரிசல் அடுத்த மாதத்தின் மூன்றாவது வாரத்திற்குள் முற்றிலுமாக நீங்கும் என்று இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது. இதற்குத் தேவையான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் (தொடர்ச்சி...) 02

## நாடாளுமன்றம்...

இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய, பெப்ரவரி 05ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவலகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப 10.00 மணி முதல் மு.ப 10.30 மணிவரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக (4 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் மு.ப 10.30 மணி முதல் மு.ப 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப 11.00 மணி முதல் மு.ப 11.30 மணிவரையான நேரம் நிலையியற் கட்டளை 27(2)இன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 11.30 மணி முதல் பி.ப 3.30 மணி வரை அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. பி.ப 3.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரையான நேரம் அரசாங்கத்தினால் பிரேரிக்கப்படவுள்ள ஒத்திவைப்பு விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 06ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவலகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 5.00 வரை புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் குறித்த விவாதம் இடம்பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணிவரை ஒத்திவைப்பு வேளையின் போதான இரு வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவலகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அர்ச்சுனா...

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இடையூறு விளைவித்த சம்பவம் குறித்து அனுராதபுரம் பொலிஸ் நிலையம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். அதன்படி, குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று (29) பிற்பகல் யாழ்ப்பாணம் பகுதியில் சிறப்பு பொலிஸ் குழுவினரால் அர்ச்சுனா கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

## மன நிலையை...

இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது. அரசியல் ஸ்திரத்தன்மை, கடன் மறுசீரமைப்பு மற்றும் இறையாண்மை, கடன் தரநிலையை மேம்படுத்துதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தென்கிழக்கு ஆசியாவில் ஒரு மாற்றத்திற்கு இலங்கையை தயார்படுத்துவதே இந்த உச்சிமாநாட்டின் நோக்கமாகும். அத்தோடு இதன் ஊடாக 2025 ஆம் ஆண்டில் சகலவித பொருளாதார முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்த ஆண்டு 4மூ க்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும், அந்த இலக்கை

வெற்றிகொள்வதற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க,

நாங்கள் இதற்கு முன்பு ஒருபோதும் அதிகாரத்தில் இருக்காத ஒரு அரசியல் இயக்கமாகும். கடந்த காலத்தில் வணிகக் குழுக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தில் சிலருக்கு எங்களைப் பற்றி ஏதேனும் சந்தேகம் இருந்திருந்தால், தற்போது அந்த சந்தேகத்தை நீக்கி, அரசாங்கத்தின் எதிர்கால திட்டம் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால போக்கில் நம்பிக்கையை வளர்க்க முடிந்துள்ளது. இது கடந்த இரண்டு மாதங்களில் நாங்கள் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் 4% க்கும் அதிகமாக இருக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் இதுவொரு சவாலாக இருந்தாலும், அதை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய ஒரு சவாலாக நாங்கள் கருதுகிறோம். நாங்கள் பல துறைகளுக்கு முன்னுரிமை அளித்து பணியாற்றி வருகிறோம்.

குறிப்பாக, வரவிருக்கும் பட்ஜெட்டில் 1.35 ட்ரில்லியன் ரூபாயை அரசாங்க முதலீட்டு மூலதனச் செலவினங்களாகச் செலவிட எதிர்பார்க்கிறோம். இது சமீபத்திய காலங்களில் மூலதனச் செலவினங்களுக்காக ஒரு அரசாங்கம் செலவிட்ட மிகப்பெரிய தொகையாக இருக்கும்.

முந்தைய அரசாங்கங்களின் செயற்திறனின்மை காரணமாக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக செலவிடப்படவில்லை. சுமார் 75% - 80% மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால், இந்த ஒதுக்கப்பட்ட பணத்தை முழுமையாகச் செலவிட தேவையான வழிமுறையை நாங்கள் தயாரித்து வருகிறோம்.

அண்மையில் முதலீட்டுடன் தொடர்புள்ள அமைச்சுக்களின் மற்றும் அரச அதிகாரிகளுடன் நீண்ட கலந்துரையாடலை நடத்தினோம். பொதுவாக எமது நாட்டிற்கு முதலீடுகளை பெற 82 நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும் என்பது தெரியவந்தது. அந்த அறிக்கையின்படி, இந்த நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெற இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் செல்லும்.

சுற்றுச்சூழலுக்கான அனுமதி பெறக்கூடிய 11 நிறுவனங்கள் உள்ளன. இதற்கு 269 நாட்கள் ஆகும். நடைமுறையில், இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் செல்கிறது. இதை 82 நாட்களாகக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஒரு முதலீட்டுத் திட்டத்திற்கு 8 நிறுவனங்களிடமிருந்து ஏனைய அனுமதிகளைப் பெற வேண்டும். நடைமுறையில், அதற்காக 184 வாரங்கள் கடந்துவிடுகிறது. இதை 102 நாட்களாகக் குறைக்க முடியும் என நாங்கள் கருதுகிறோம்.

ஒரு திட்டத்தை மதிப்பீடு செய்து முடிவெடுக்க முதலீட்டு சபைக்கு 80 நாட்கள் ஆகும். இதை இரண்டு வாரங்களாகக் குறைப்பதே எங்கள் எதிர்பார்ப்பாகும். பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக இருந்தால், அந்நிய நேரடி முதலீட்டிற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

சுற்றுலாத் துறையில் விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் நமக்கு உள்ளது. இந்த ஆண்டு 3 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வர எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் கப்பற் துறைகளில் முன்னேற்றத்தை அடைய முடியும். மேற்கு இறங்குதுறையில் செயல்பாடுகள் இந்த மார்ச் மாதத்தில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு இறங்குதுறையில் செயல்பாடுகள் ஜுலை மாதத்திற்குள் தொடங்க முடியும். எனவே, கடல்சார் துறையில் ஓரளவு பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியும். நாம் விரும்பும் பொருளாதார வளர்ச்சியை அடைய முன்னுரிமை அளிக்க வேண்டிய பல துறைகளை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். எனவே, இந்த இலக்குகளை வெற்றிகொள்ள முடியும்.

சாம்பூர் மின் உற்பத்தி நிலையத்திற்கான எங்கள் உடன்பாட்டை நாங்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளோம். நீண்ட காலமாக முடங்கிக் கிடக்கும் துறைமுகத்தில் விநியோக மையத்தை மிக விரைவில் தொடங்கவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். முதலீட்டுச் சபையில் பல திட்டங்கள் முடங்கியுள்ளன. அந்தத் திட்டங்களை விரைவாக முன்னோக்கிக் கொண்டு செல்லத் தேவையான அனுமதிகள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்தியா மற்றும் சீனாவுடன் பல முக்கிய திட்டங்கள் குறித்து நாங்கள் விவாதித்து வருகிறோம். எனவே, நாட்டிற்கு கணிசமான அளவு வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க முடியும் என்று நாங்கள் நம்பிக்கையுடன் உள்ளோம் என்றார்.

## ராஜபக்ஷ...

என்றும் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். மேலும் குறித்த எக்ஸ் பதிவில், "கிரிஷ் நிறுவனம் தொடர்பான வழக்கில் என் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதாக ஊடகங்களில் படித்தேன். இந்த விவகாரம் முதன்முதலில் நல்லாட்சி அரசாங்கத்தின் போது விசாரிக்கப்பட்டபோது, 8 ஆண்டுகளுக்கு முன்பு சட்டமா அதிபரிடம் பரிந்துரைக்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் 8 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.தற்போதைய அரசாங்கம் ராஜபக்ச குடும்பத்திற்கு எதிராக அரசியல் வேட்டையைத் தொடங்கியுள்ளது என்பது தெளிவாகிறது.

எனக்கு நீதித்துறை மீது நம்பிக்கை உள்ளது, நீதி வெல்லும் என்று நம்புகிறேன். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், எங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை புனைவதன் மூலம், நாட்டை நிர்வகிப்பதில் அவர்கள் செய்த தோல்விகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பவும், மக்கள் எதிர்கொள்ளும் கடுமையான சுமையைக் குறைக்கவும் முடியும் என்று நம்புவதாகத் தெரிகிறது.

இருப்பினும், அவர்களின் குறைபாடுகள் விரைவில் அனைவரும் காணும் வகையில் வெளிப்படும். ராஜபக்சக்கள் மீதான தாக்குதல்களுக்குப் பின்னால் அரசாங்கம் தனது தோல்விகளை நீண்ட காலத்திற்கு மறைக்க முடியாது. நீதி எல்லாவற்றிற்கும் மேலாக வெல்லும் என்று நான் உறுதியாகவும் உண்மையாகவும் நம்புகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அரசின்...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தற்பொழுது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல் விஷேட சட்ட மூலம் அடிப்படையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனு பெறப்படும் திகதி அறிவிக்கும் முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அவர்களுக்கு கீழ் இயங்கும் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதத்துக்குள் உள்ள ஒரு திகதியாக வேண்டும். ஆகவே தேர்தல் ஆணைக்குழு சகல அரசியல் கட்சி செயலாளர்களை அழைத்து கலந்தாலோசித்த பிற்பாடு திகதி அறிவிக்கப்பட வேண்டும். அரசாங்கத்துக்கோ அல்லது கட்சிக்கோ சாதகமாக திகதியை தீர்மானிப்பது ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாக நாங்கள் கருதுகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## எதிரணியை...

அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் அனைவரையும் ஒன்று திரட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொண்டார். இதன் மூலம் பலமான நாடாளுமன்றத்தை உருவாக்க முடியும் என்றும்,அரசாங்கத்தின் (தொடர்ச்சி..)

சிறந்த விடயங்களுக்கு ஆதரவளிப்பது போலவே, நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகம் விளைவிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிராக மக்கள் பக்கம் நாம் முன்நிற்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் சுட்டிக்காட்டினார். இச்சந்திப்பில், அனுரத ஜயரத்ன, சாணக்கியன் இராசமாணிக்கம், மனோ கணேசன், பழனி திகாம்பரம், கயந்த கருணாதிலக, ஜே.சி.அலவத்துவல, அஜித் பி. பெரேரா, ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## உள்ளூராட்சி...

கொழும்பு டார்லி வீதியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் கடந்த 27ஆம் திகதி ஒன்றுகூடி இது தொடர்பில் கலந்துரையாடியதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, அநுர பிரியதர்ஷன யாப்பா, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண ஆகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து நீங்கிய குழு சார்பில் பிரமித பண்டார தென்னகோன் உள்ளிட்ட குழுவும், சர்வஜன பலய சார்பில் பேராசிரியர் சன்ன ஜயசுமன ஆகியோரும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர்.

உள்ளூராட்சி தேர்தல் மற்றும் தற்போதைய அரசியல் சூழல் உள்ளிட்ட பல காரணிகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது.இந்த காரணங்கள் தொடர்பில் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களிலும் கலந்துரையாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய...

வடமராட்சிக் கடற்பரப்புக்குள் அத்துமீறி உள் நுழைந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இறைமையுள்ள நாடு. அதன் கடல் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் தொடர்ச்சியாக அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழித்து வருகின்றார்கள்.

இந் நிலையில் செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை கைது செய்வதற்காக கடற்படையினர் சுற்றிவளைத்து அவர்களின் படகுகளுக்குள் கடற்படையினர் ஏறியுள்ளனர். இவ்வாறு இந்திய படகில் ஏறிய கடற்படை வீரர்களை படகுடன் இழுத்துச் செல்வதற்கு இந்திய மீனவர்கள் தயாரானபோது கடற்படையினர் தடுத்து நிறுத்துவதற்காக துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

இந்திய அத்துமீறிய மீன்பிடி விவகாரம் இன்று நேற்று உருவானது விடயம் அல்ல. பல வருடங்களாக நீடித்து வரும் பிரச்சினை.இந்த பிரச்சினைக்கு எமது ஆட்சியில் தீர்வை காண்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அத்துமீறி இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடாதீர்கள், எமது மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதீர்கள் என்று நாங்கள் பலமுறை இந்திய மீனவர்களை தயவாகக் கேட்டுள்ளோம்.

அண்மையில் கூட நெடுந்தீவு மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இந்திய இழுவைப் படகுகள் அத்து மீறி உள் நுழைந்து அப்பகுதி மீனவர்களின் வலைகளை நாசப்படுத்தியதுடன் அவர்களை பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்களாக ஆக்குகின்றனர்.நான் அந்த பகுதிக்கு விஜயம் சென்றபோது மக்கள் கண்ணீர் மல்க இந்திய இழுவைப் படகுகளை நிறுத்துங்கள் எங்களால் வாழ முடியாது உள்ளது என கூறுகிறார்கள்.

இந்திய அத்துமீறிய மீனவர்கள் எமது மீனவ மக்களை துன்பப்படுத்தும் செயற்பாடுகளை எக்காரணத்தினாலும் அனுமதிக்க முடியாது.எமது இலங்கை கடற்படை தமது கடல் எல்லையை பாதுகாப்பதற்காக கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் அத்துமீறும் இந்திய மீன்பிடிப் படகுகளை கைது செய்வது வழமையான செயற்பாடு. கைது நடவடிக்கைகளில் ஒத்துழைக்காத படகுகளை துரத்தும் போது சில அசம்பாவிதங்கள் கடலில் ஏற்படுகின்றன. இவை கடந்த காலங்களிலும் இடம் பெற்றுள்ளன. ஆகவே இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லையை தாண்டாது மீன்பிடியில் ஈடுபடுவது தேவையற்ற அனர்த்தங்களை தவிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார் .

## கொள்கலன்...

தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க ஆகியோர் தினமும் துறைமுகத்திற்கு வருகை தந்து இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்களில் அதிக எண்ணிக்கையானது சீனா மற்றும் இந்தியாவிலிருந்து வருவதுடன், ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்தில் இருந்து சீனாவிலிருந்து கொள்கலன் இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு சீனாவில் உள்ள தொழிற்சாலைகளுக்கு ஒரு மாத கால விடுமுறை வழங்கப்பட்டதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, பெப்ரவரி மாதம் இரண்டாவது வாரம் வரை நாட்டிற்குள் நுழையும் கொள்கலன்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்படும் என்றும், அந்தக் காலகட்டத்தில் தற்போதுள்ள கொள்கலன் நெரிசல் விரைவில் தீர்க்கப்படும் என்றும் இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

## பீடாதிபதி...

நேற்று (29) மாலை நடைபெற்ற நிலையில், இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வகுப்பு நீக்கம் செய்யப்பட்ட சில மாணவர்கள் மீதான தடையை நீக்குவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பின்னர், பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தனது பதவியிலிருந்து விலகுவதாகப் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இது குறித்துக் கலந்துரையாடும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையின் விசேட பொதுக்குழுக் கூட்டம் இடம்பெற்றது.இதில், பேராசிரியர் ரகுராம் மீண்டும் நாளை பதவியேற்கவுள்ளதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.பதவி விலகிய கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராமிற்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்து ஆதரவு தெரிவித்திருந்தனர்.

அண்மையில் நடைபெற்ற பேரவைக்கூட்டத்தினை தொடர்ந்து கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்திருந்தார். மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனைகளால் யாழ். பல்கலைக்கழகம் குறிப்பாக கலைப்பீட மாணவர்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளை தட்டிக் கேட்டமை ,மாணவ மாணவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சீரிய முடிவுகளை எடுப்பதற்கு பல்கலைக்கழக பேரவை ஒத்துழைப்பு வழங்காமை போன்ற காரணங்களால் அவர் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நெல்லுக்கான...

உத்தரவாத விலையை நிர்ணயிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம்(28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெரிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு தேவையான விதத்தில் அரிசி விலையை தீர்மானிப்பதற்காக அரசாங்கமானது நெல்லுக்கான உத்தரவாத விலையை தாமதப்படுத்துகிறதா என்ற கேள்வி எழுகிறது என்றும், இதில் ஏதோ சதி இருப்பதாக சந்தேகம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாண பிரதேசங்களில் நெல் அறுவடை செய்த பின்னர் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளதாகவும் நெல் விற்பனை செய்து முடித்த பின்னர், நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயிக்கப் போகிறார்களா எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதன் காரணமாக, நெல் மாஃபியாக்கள் விரும்பும் விதத்தில் நெல்லின் விலையை நிர்ணயிக்கும் முறையில் அரசாங்கம் ஈடுபட்டு வருவது தெளிவாகிறது என்று அவர் கூறினார்.

நாளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் சிவப்பு பச்சையரிசி, வெள்ளைப் பச்சையரிசி அரிசிகளுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாகவும் அரிசி சந்தையில் காணப்பட்டாலும் 300 ரூபாய்க்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவதாகவும் சிவப்பு சம்பா கிலோ ஒன்று 320 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## போராட்டத்துக்கு...

அதிகாரசபை அந்த சுற்றிவளைப்புகளை செயல்படுத்த வேண்டும் என்று வணிகர்கள் கருதுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

# ஒற்றையாட்சி அரசியலமைப்பு நிறைவேறினால் அரசியலிலிருந்து ஒதுங்கி விடுவேன்

(கி.வசந்தன்)

ஒற்றையாட்சி அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டால் அதன் பின் தேசியம் பேசி பயனில்லை. சர்வசன வாக்குரிமைக்கு வரும் போது வடக்கு – கிழக்கு மக்கள் இதனை உணர்ந்து எதிர்க்க வேண்டும். அவ்வாறு ஒற்றையாட்சி அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தால் நானும் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்ளுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் (28) பிற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இக் கலந்துரையாடலில் கட்சியின் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன், சட்டத்தரணிகளான காண்டீபன், சுகாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கமானது அறுதிப்



பெருமபான்மையுடன் உள்ளது. இந்த அரசாங்கம் மக்கள் மத்தியில் தனது இருப்பை தக்க வைக்க ஏதாவது செய்ய வேண்டியுள்ளது. அதனடிப்படையில் விரைவாக ஒரு அரசியலமைப்பை கொண்டு வர வாய்ப்புள்ளது. அறுதிப் பெரும்பான்மையுடன் இருப்பதால் இந்த அரசாங்கம் கொண்டு வரும் அரசியலமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும்.

வடக்கு – கிழக்கு ரீதியில் 19 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் தேசியம் என்ற அடிப்படையில் 10 பேர் இருக்கின்றோம். குறைந்த பட்சம் இந்த அரசாங்கம் கொண்டு வரும் ஒற்றையாட்சி அரசியலமைப்பை தேசியம் பேசுகின்ற 10 பேராவது எதிர்க்காவிட்டால் தமிழ் தேசிய கட்சிகளின் ஆதரவுடன் இது நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். அதன் பின் நாம் தேசியம் பேசி பயனில்லை. குறிப்பாக இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து 3 அரசியலமைப்பு சீர்திருத்தங்களை எமது தமிழ் தலைமைகள் எதிர்த்து வந்துள்ளனர். அதன் காரணமாகவே தமிழ் தேசிய இனப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்பட வில்லை என்ற நிலை சர்வதேச சமூகம் மத்தியில் உள்ளது. புதிய அரசியலமைப்பை தமிழ் தேசிய கட்சிகள் ஏற்றுக் கொண்டால் 76 வருடமாக தமிழ் தலைமைகளும், விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக செய்த அத்தனை தியாகங்களும் வீணாகிவிடும்.

எனவே, தமிழ் தேசிய கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒற்றையாட்சி அரசியலமைப்பை எதிர்த்து வடக்கு – கிழக்கு தமிழர் தேசம் என அங்கீகரிக்கப்பட்ட, தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு அரசியலமைப்பை கோர வேண்டும். நாடு பிரிக்கப்படாது அது வழங்கப்படுமாக இருந்தால் சமஸ்டி ஊடாக மட்டுமே அதனை வழங்க முடியும். எனவே அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டும். அத்துடன், ஒற்றையாட்சி அரசியலமைப்பு நடைமுறைக்கு கொண்டு வந்தால் அதனை சர்வசன வாக்குரிமைக்கு விட வேண்டும். இதன் போது வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை உணர்ந்து ஒற்றையாட்சி அரசியலமைப்பை எதிர்க்க வேண்டும். தமிழ் தேசிய கட்சிகள் மீது உள்ள வெறுப்பால் பாடம் புகட்ட வேண்டும் என கடந்த தேர்தல்களில் வேறு கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் வாக்களித்து இருந்தாலும் கூட, அரசியலமைப்பு விடத்தில் ஒன்று பட வேண்டிய தேவை உள்ளது.

இது எமது அடிப்படை உரிமைப் பிரச்சினை. அதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேணடும். ஊடகங்கள் அதனை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு நிறைவேற்றப்படுமாக இருந்தால் அதன்பின் கட்சிகள் தமிழ் தேசியம் என்ற பெயரை வைப்பதாலும், தேசியம் பேசுவதாலும் எந்த பயனும் இல்லை. நானும் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன். அதன் பின் தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் இல்லை. 76 வருட போராட்டம் தோல்வி கண்டதாக முடியும். இந்த ஆபத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 17ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்**: இன்று நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும்.

**ரிஷபம்**: பணியிடத்தில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

**மிதுனம்**: இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல.

**கடகம்**: இன்று துடிப்பான நாளாக இருக்கும்.

**சிம்மம்**: இன்று உங்களுக்கு சாதகமான நாள்.

**கன்னி**: உங்கள் துணையிடம் அதிருப்தி காண்பீர்கள்.

**துலாம்**: இன்று அதிகப் பணிகள் காணப்படும்.

**விருச்சிகம்**: இன்று கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

**தனுசு**: இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள்.

**மகரம்**: இன்று வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும்.

**கும்பம்**: பணியில் இன்று வளர்ச்சி காணப்படாது.

**மீனம்**: பண வரவு இன்று மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று மாலை 06:06 வரை பிரதமை பின்பு துவிதியை.
**நட்சத்திரம்:** இன்று காலை 08:59 வரை திருவோணம் பின்பு அவிட்டம்.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** பூசம்.
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** 01:30 PM முதல் 3:00 PM வரை.
**குளிகை:** 09:00 AM முதல் 10:30 AM வரை.
**எமகண்டம்:** 06:00 AM முதல் 07:30 AM வரை.

## தென்கிழக்கு பல்கலையில்

# உள வள ஆலோசனைகள் தொடர்பான செயலமர்வு!





(நூருல் ஹுதா உமர்)

"பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயனுள்ள ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கான அத்தியாவசிய திறன்கள் மற்றும் நெறிமுறைகள் செயலமர்வு" என்ற தொனிப்பொருளிலான செயலமர்வு தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் நிலையத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எச்.எம்.நிஜாம் தலைமையில் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு நாட்டுக்கு நல்ல பிரஜைகளை உருவாக்கும் உயரிய பணியில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஊழியர்களின் பணிகளை பாராட்டியதுடன் எதிர்காலத்தில் மாணவர்களின் நன்னடத்தையில் மேலும் முன்னேற்றங்கள் இடம்பெற, சம்மந்தப்பட்டவர்கள் கரிசனை செலுத்த வேண்டும் என்றும் குறித்த விடயம் தொடர்பில் கடந்த காலங்களில் தான் கண்ட அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார். நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபாரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற நிகழ்வுக்கு வளவாளர்களாக கலந்து கொண்ட முன்னாள் மாணவர் நலன்புரி சேவைகள் நிலையத்தின் பணிப்பாளர் (SSSW) சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். சமீம், (Common issues in student counselling & Mentoring) என்ற தலைப்பிலும் பொறியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எஸ். எம். ஜுனைடீன், (Essential skills and strategies for effective counselling and mentoring for university students) என்ற தலைப்பிலும் சட்டம் மற்றும் ஆவணங்கள் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளர் சட்டத்தரணி ஏ.ஆர்.எம். சுல்பி, (Legal perspective on student discipline and student counselling) என்ற தலைப்பிலும் கருத்துரைகளை வழங்கினர்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அந்தனி ஜீவா நினைவுப்பகிர்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட எழுத்தாளர் அமரர் அந்தனி ஜீவாவின் நினைவுப்பகிர்வு 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் பி.ப.05.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இந்நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நினைவுப் பகிர்வுரையை பேராசிரியர் சி.மௌனகுரு, தம்பு சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், மல்லியப்புசந்தி திலகர், சதீஸ் செல்வராஜ்,கே. பொன்னுதுரை ஆகியோர் ஆற்ற உள்ளனர்.

## இந்திய மீனவர்கள் மீதான துப்பாக்கிச்சூடு

# எதிர்பாராத விதமாக துப்பாக்கி இயங்கியமையே காரணம்

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

காங்கேசன்துறை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு இந்திய மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானமைக்கு எதிர்பாராத விதமாக துப்பாக்கி இயங்கியமையே காரணம் என கடற்படை நேற்று (29) உறுதிப்படுத்தியது.

இந்த சம்பவம் தொடர்பான முதற்கட்ட விசாரணையைத் தொடர்ந்து இந்த விடயம் தெரியவந்ததாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட தெரிவித்தார்.

இதற்கிடையில், கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களும் மல்லாகம் நீதவானிடம் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் குழுவொன்று சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், கடற்படை குழுவினர் கடந்த 27 ஆம் திகதி இரவு அவர்களை கைது



செய்தனர்.இக்கைது நடவடிக்கையின் போது கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு இந்திய மீனவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# 7 புற்றுநோய் மருந்துகளுக்கு பற்றாக்குறை

புற்றுநோய் சிகிச்சைக்கு தேவையான 7 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இரத்த புற்றுநோய் நிபுணரான டொக்டர் புத்திக சோமவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை புற்றுநோயியல் நிபுணர்கள் கல்லூரியின் பதிவாளர், இரத்த புற்றுநோய் நிபுணரான டொக்டர் புத்திக சோமவர்தன, இரண்டு வகையான வாய் மருந்துகளுக்கும் ஐந்து வகையான தடுப்பூசிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மெற்கண்டவாறு தெரிவித்தார்.

மருந்துப் பதிவு, விநியோகம் மற்றும் இறக்குமதி நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பல சிக்கல்கள் இந்தப் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் கலாநிதி புத்திக சோமவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.




தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையமும், மாநில மருந்து ஒழுங்குமுறைக் கழகமும் இணைந்து உரிய மருந்துகளை விரைவில் கொள்முதல் செய்து வருவதாக தெரிவித்த அவர், இலங்கையில் புற்றுநோய் சிகிச்சைக்கு 28 வாய்வழி மருந்துகளும் 33 ஊசி மருந்துகளும் இன்றியமையாதவை என்றும் தெரிவித்தார்.

# முறைப்பாடுகளை துரிதமாக பெற புதிய வட்ஸ்அப் இலக்கம் அறிமுகம்

பொதுமக்களிடமிருந்து எழுத்துபூர்வ முறைப்பாடுகளை துரிதமாக பெறுவதற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் புதிய வட்ஸ்அப் இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அல்லது அந்தத் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டிய மேல்முறையீடுகள் அல்லது முறைப்பாடுகளை 071 40 33 300 என்ற வட்ஸ்அப் எண்ணுக்கு எழுத்துபூர்வமாக அனுப்பலாம்.

இந்த எண்ணிற்கு பொதுமக்கள் எழுத்துபூர்வமாக சமர்ப்பிக்கும் முறைப்பாடுகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க ஏற்கனவே பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, Tell DMT என்ற முகநூல் பக்கம் மூலமும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் இணைவதற்கான மற்றொரு வாய்ப்பும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இ.போ.ச தலைவர் பதவிவிலகல்



இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பதவியிலிருந்து ரமல் சிறிவர்தன விலகியுள்ளார்.

அவரது பதவி விலகல் கடிதம் அமைச்சுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தனிப்பட்ட காரணங்களுக்காக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பதவியிலிருந்து தாம் விலகுவதாக ரமல் சிறிவர்தன அறிவித்துள்ளார்.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# 'கிளீன் ஸ்ரீலங்கா' எளிதான காரியம் அல்ல!

கடந்த ஞாயிற்றுக்கிழமை களுத்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது மனைவிகளுக்கு ஏற்கனவே போதுமான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு வழங்கப்பட்ட 60 பேர் கொண்ட குழு போதுமானதாக இல்லை என்று முறைப்பாடு செய் தால், பாதுகாப்பும் திரும்பப் பெறப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது மனைவிகளுக்கு சட்டப்படி "பொருத்தமான" வீடு அல்லது அவர்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு சமமான கொடுப்பனவு மட்டுமே வழங்கப்படுகிறது என்றும், எனவே அவர்கள் தற்போது வசிக்கும் ஆடம்பரமான அரசாங்க மாளிகைகளை காலி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் மதிப்பீட்டின்படி, மகிந்த ராஜபக்ஷ தற்போது வசிக்கும் அதே அரசாங்கத்திற்குச் சொந்தமான வீட்டில் வசிக்க விரும்பினால், அவர் மாதத்திற்கு ரூ.4.6 மில்லியன் வாடகை செலுத்த வேண்டும் என தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் இந்த முடிவை அறிவித்ததிலிருந்து, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாசவும் அரசாங்க வீடுகளில் இருந்து வெளியேறிவிட்டனர். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அரசாங்க உத்தியோகபூர்வ இல்லத்திற்கு செல்லவில்லை. அதற்காக அநுரகுமார திஸாநாயக்க அவருக்கு நன்றியும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகள் தொடர்பான இந்த புதிய அரசாங்க முடிவுக்கு இதுவரை மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரது ஆதரவாளர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் இன்னும் அந்த இல்லங்களில் உள்ளனர், ஆனால், அவர்கள் இன்னும் அது குறித்து ஒரு பொது அறிக்கையை வெளியிடவில்லை.

எனினும், ஒரு புறம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்களும் அரசாங்கத்தின் இந்த முடிவை விமர்சித்து வருகின்றனர்.

தற்போதைய அரசாங்கத்தின் நாடளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், உயர்மட்ட அரச அதிகாரிகள், நீதிபதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் வீடுகளிலும் இதே நிலைதான் இருக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். அரசாங்கத்தை விமர்சித்ததற்காக மகிந்த ராஜபக்ஷவைப் பழிவாங்குவதற்காக அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி கூறியிருந்தது.

மேலும், கடந்த தேர்தல்களில் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்குகள் குறைவாக காணப்பட்ட பிரதேசங்களில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவே அதிக வாக்குகளைப் பெற்றிருந்தது. இதன் காரணமாக பழிவாங்கியிருக்கலாம் எனவும் சில விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. அதனால் தான், யோஷித மற்றும் நாமலைக் குறிவைத்து வருவதாகவும் அரசல் புரசலாக பேசப்பட்டு வருகிறது.

எனினும், இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், தற்போதைய அரசாங்கத்தின் இந்த தீர்மானமானது ஆட்சியமைத்த பின்னர் திடீரென மேற்கொள்ளப்பட்ட ஒன்று அல்ல. அவர்களின் தேர்தல் வாக்குறுதிகளில் இதுவும் ஒன்று.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மட்டுமல்ல ஓய்வு பெற்ற அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை நீக்குவதும் அவர்களின் தேர்தல் வாக்குறுதிகளுள் உள்ளடங்குகிறது.

ஆக, இதை நடைமுறைப்படுத்துவதை ஏன் என இப்போது எதிர்ப்பவர்கள் தேர்தல் வாக்குறுதி வழங்கப்படும் போது ஏன் மௌனமாக இருந்தார்கள் என்றொரு கேள்வி எழுகிறது அல்லவா? ஏன் எதிர்க்கவில்லை?

இதற்கிடையே தான், தற்போதைய அரசாங்கம் எழுத்துபூர்வமாக அறிவித்தால் மாத்திரமே அரச மாளிகையிலிருந்து வெளியேறுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்திருந்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில், அத்தகைய அறிவிப்பு தேவையில்லை என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கை சட்டதிட்டங்களின் அடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு அரசாங்கத்தால் "பொருத்தமான" வீடு வழங்கப்பட வேண்டும் அல்லது அவரது ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு சமமான வீட்டு வாடகையையோ வழங்க வேண்டும். என கூறப்படுகிறது.

அரசியல் என்பது மக்களுக்கு சேவை செய்வதைக் குறிக்கிறது. அதற்காக பொதுச் சேவையில் ஈடுபடுபவர்கள் பொது மக்கள் பணத்தில் வாழ வேண்டும். அதுவும் மக்களை விடவும் ஆடம்பரமான ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும் என சட்டத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

இத்தகைய ஆடம்பர வாழ்க்கையை ஒழிக்க வேண்டும் என்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் கொள்கையை மக்கள் நிச்சயம் மறுக்க மாட்டார்கள், மறுக்கவும் முடியாது.

இத்தனை காலமாக மக்கள் வரிப் பணத்தில் பல சலுகைகளை பெற்று வந்த ஊழல் அரசியல்வாதிகள் தான் இதனை மறுக்கிறார்கள், எதிர்க்கிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலைகள் மூலம் ஒரு விடயத்தை தெளிவாக உணர முடிகிறது. கிளீன் ஸ்ரீலங்கா அவ்வளவு எளிதான விடயம் அல்ல.

# கைதுகள் எமக்கு பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன





**கிண்ணியா**
**கியாஸ் ஷாபி**

அரசாங்கம் தற்போது மேற்கொள்கின்ற கைதுகள் எமக்கு பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன என திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய கைதுகள் தொடர்பாக, கிண்ணியாவில் கடந்த செவ்வாய் அன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

குறிப்பாக, இன்று கைது செய்யப்படுகின்றவர்கள் எந்த நிலையில், எப்படி கைது செய்யப்படுகிறார்கள்? என்பதை வைத்துப் பார்க்கின்ற போது அரசாங்கத்தின் மீது எங்களுக்கு சந்தேகம் நிலவுகின்றது.

தற்போது, உள்ளூராட்சிமன்ற தேர்தல் நெருங்கி வருகின்ற சந்தர்ப்பத்தில், இந்த கைதுகள் இடம்பெறுகின்றன. இதில் பலத்த சந்தேகங்கள் நிலவுகின்றன. மேலும், மீண்டும் இந்த ராஜபக்ஷ அணியினரை பலப்படுத்துவது உள்நோக்கமாக இருக்குமோ என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில், நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்ற விடயம் என்னவென்றால், நீங்கள் தேர்தல் காலங்களில் மேடைகளில், என்ன விடயங்களை கூறினீர்களோ அந்த விடயங்களை நிறைவேற்றுங்கள். அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

எந்த அரசியல்வாதியாக இருந்தாலும், எந்த தராதரத்தில் இருந்தாலும், ஊழல் புரிந்தவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அரச சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்குமானால், அதனால் மக்களின் வாழ்வாதாரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்குமானால் அவர்களை சட்டத்தின் முன்கொண்டுவந்து, சரியான தண்டனை வழங்கப்பட வேண்டும். அதைச் செய்யுங்கள் என்றே அரசாங்கத்திடம் கேட்கின்றோம்.

குறிப்பாக, தேர்தல் காலங்களில் பரவலாக பேசப்பட்ட விடயம்தான் ஈஸ்டர் தாக்குதல். இன்று தேர்தல்கள் முடிந்துவிட்டன. ஈஸ்டர் தாக்குதல் குறித்த பேச்சுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

ஆகையால், அரசியலுக்காக நடாத்தப்பட்ட அந்த ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டறிவது அரசாங்கத்தின் கடமை எனவும் கூறினார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைவு குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் இங்கு கருத்து தெரிவித்தார்,

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைவு குறித்து இன்று பரவலாக மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது.

இந்த நிலையில், இரண்டு கட்சி சார்பாகவும் அதற்காக குழு நியமிக்கப்பட்டு, அந்த விடயம் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில், இணைந்து போட்டியிடுவது தொடர்பாக, இந்த பேச்சுவார்த்தை எந்த அளவு சாத்தியமாக இருக்கப் போகின்றது என்பது சந்தேகமே.

ஏனெனில், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மிக அண்மையில், நடைபெற இருப்பதனால், ஒரு குறுகிய காலத்துக்குள், பேச்சுவார்த்தை வெற்றி அளித்து, அதற்கிடையில் இரு கட்சிகளும் இணைவது சாத்தியமில்லை என்றே நான் கருதுகின்றேன்.

இப்போது, இரண்டு கட்ட பேச்சு வார்த்தைகள் நிறைவு பெற்றிருக்கின்றன. இணைவு குறித்து, இன்று மக்கள் மத்தியில் இரு வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக, இரண்டு கட்சிகளும் இணைய வேண்டும் என்று ஒரு சாராரும், இரு கட்சிகளும் இணையக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இன்னொரு சாராரும் இருப்பதால், இது தொடர்பாக, மக்களின் கருத்துக்களை மையப்படுத்தி, ஏகோபித்த தீர்வு ஒன்றுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர், இணைவு சாத்தியப்படக்கூடிய வாய்ப்பு குறைந்தே காணப்படுகின்றது. எனினும் அது தொடர்பாக மும்முரமான பேச்சுவார்த்தைகளும் சமகாலத்தில் இடம்பெறுகின்றன என்றும் தெரிவித்தார்.

# மக்களின் நலனை மேம்படுத்தும் சமூகப்பணி மனிதனின் செயல்திறனை உருவாக்கும் சேவை

சமூகப்பணியானது முதன் முதலாக அமெரிக்காவில் தோற்றம் பெற்று இன்று வரை வளர்ச்சியடைந்து வந்துள்ளது. சமூகப்பணி என்பது மக்களின் நலனை மேம்படுத்தவும், சமூகத்தில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும், சமூக நலன் கருதியும், மனிதனின் செயல்திறனை உருவாக்கும் நோக்கில் செயற்படும் சேவை ஆகும். சமூகப்பணி என்பதற்கு LASSW இன் வரைவிலக்கணமாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. தொழில்வாண்மையான சமூகப்பணியானது பயிற்சியினையும் கல்வியினையும் அடிப்படையாகக் கொண்ட பரீட்சையம் ஆகும். இது சமூக மாற்றம், சமூக அபிவிருத்தி, சமூக நல்லிணக்கம், சமூக வலுவூட்டல் மற்றும் சமூக விடுதலையினை ஊக்குவிக்கின்றது. சமூகப்பணியினுடைய மையங்களாக சமூக நீதிக்கான மூலதர்மங்கள், மனித உரிமைகள், மற்றும் கூட்டிணைந்த பொறுப்பு மற்றும் பன்மைத்தன்மைக்கு மதிப்பளித்தல். சமூகப்பணி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் ஏனைய சமூக விஞ்ஞானங்களின் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டு காணப்படுவதோடு பாரம்பரிய அறிவுகளிற்கும் மதிப்பளிக்கின்றது. சமூகப்பணியானது மக்கள் மற்றும் வாழ்கின்ற சூழல் என்பவற்றினால் வாழ்க்கையில் காணப்படும் சவால்களுக்கு முகங்கொடுப்பதோடு மக்களுடைய தான் சார்ந்த நிலையை மேம்படுத்துகின்றது.

இவ்வாறு சமூகப்பணியினை செய்யும் நபர்கள் சமூகப்பணியாளர்கள் என அழைக்கப்படுவர். இவர்கள் சமூகத்தின் பல்வேறு துறைகளில் பணியாற்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். மக்களின் உடல், உள ஆரோக்கியம், கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றிற்கு உதவுவதுடன் சமூகப் பாகுபாடுகள் மற்றும் அநியாயங்கள் ஆகியவற்றை சரிசெய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் சமூகத்தின் தேவைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு தேவையான உதவிகளையும் வழங்குதல். மக்களுக்கு உதவுவதன் மூலம் சமூகத்தில் ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்துகின்றது. சமூகப்பணியாளர்கள் மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக்களைப் பெறுகின்றார்கள். இதன் மூலம் அவர்களுடைய கோரிக்கைகளை நேரடியாகப் புரிந்து கொள்ள உதவும்.

சமூகப்பணியானது தொழில்வாண்மை ரீதியாக நோக்கப்படும்போது குறித்த பணியினை மேற்கொள்பவர் வினைத்திறனான சேவையினை வழங்குவதற்கு தனது திறன்களை அவ்வப்போது விருத்தி செய்பவராகக்காணப்பட வேண்டும்.



சேவைநாடியை ஏற்றுக்கொள்ளல், அவர்களுடன் தொழில்வாண்மை ரீதியான உறவைக்கட்டியெழுப்புதல், சிறந்த தொடர்பாடலைப்பேணுதல், அர்த்தமுள்ள வகையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தல், சுயாதீன தீர்மானங்களுக்கு மதிப்பளித்தல், இரகசியங்களைப் பேணுதல் போன்றவற்றை மேற்கொள்வதற்கு பொருத்தமான பயிற்சி அவசியமாகக் காணப்படுகின்றது. எனவே இவ்வாறு பயிற்சிகளை முறையாகக் கற்றுக் கொள்வதற்கு முறைப்படுத்தப்பட்ட கல்வி முறை ஒன்று அவசியமாகும். இக் கல்விமுறை Diploma தரமாகவோ அல்லது இளமாணி, முதுமாணி, முதுத்தத்துவமாணி, கலாநிதி போன்ற பட்டங்கள் வரையும் ஒழுங்கமைக்கப் பட்டவையாகக் காணப்படுதல் அவசியமாகும்.

சமூகப்பணியானது சமூக சேவை, சமூக நலன்புரி, சமூக அபிவிருத்தி என்பவற்றினூடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. சமூக சேவை என்ற அடிப்படையில் சமூகத்தில் சிரமதானம், அன்னதானம், இரத்ததானம், நிவாரணம், அனர்த்தத்தின் போது உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்தல், இலவச மருத்துவ முகாம் போன்ற விடயங்களில் ஈடுபட்டு வருகின்றது. சமூக நலன்புரி என்ற அடிப்படையில் இலவசக்கல்வி, இலவச மருத்துவம், சமுர்த்திக்கொடுப்பனவுகள், ஊனமுற்றோருக்கான கொடுப்பனவுகள், அஸ்வெசும, ஓய்வூதியத் திட்டம் என்பவற்றினூடாகவும் சமூக அபவிருத்தி என்ற அடிப்படையில் சுகாதார வசதிகளின் மேம்பாடு, உணவு முத்திரைத் திட்டம், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக அனுமதிகள், பாலின சமத்துவம் ரீதியான சட்டங்கள் என்பவற்றின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறு செயற்பட்டு வருகின்ற சமூகப்பணியானது கல்வி என்ற வகையில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் பேராதனை பல்கலைக்கழகத்தில் Masters and Bachelor of social work, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் Bachelor of social work கற்பிக்கப்படுவதுடன் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் Diploma Masters Bachelor of social work கற்பிக்கப்பட்டு வருகின்றது. சமூகப்பணியானது சமூகவியல், உளவியல், அரசறிவியல், பொருளாதாரம், புவியியல் மற்றும் கல்வியியல் போன்ற சமூக விஞ்ஞானங்களுடன் தொடர்புபட்டு கற்பிக்கப்படுகிறது.

சமூகப்பணி என்பது பெரும்பாலும் தனிப்பட்ட நபர்கள், அரசாங்கங்கள் அல்லது தொண்டுபுரிதல் அமைப்புக்களின் மூலம் செயல்பட்டு வருகின்றது. இது சமுதாயத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை உருவாக்குகின்றது. சமூகப்பணி மக்களின் அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு மட்டும் அல்லாது சமூகத்தில் உள்ள சமூகப்பிரிவுகளுக்கு இடையில் சமத்துவம் ஏற்படுவதற்கும் உதவுகின்றது. எனவே சமூகப்பணி என்பது ஒவ்வொரு சமூகத்திலும் அவசியமான ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. சமூகத்தின் குறைகளை சமாளித்து மக்களுக்கு உதவுவதன் மூலம் மனிதநேய மனப்பான்மையை வளர்க்கவும் ஒரே சமயத்தில் அந்த சமூகத்தின் சமூகவியல் நிலையை மேம்படுத்தவும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**ரெட்ணசிங்கம் ரெட்ணஷஞ்ஜிகா**
*முதலாம் வருட மாணவி*
*தேசிய அபிவிருத்தி நிறுவனம் (NISD)*



# தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டம் சட்டரீதியற்றது:

## நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் போடப்படும் - சட்டத்தரணி க.ரவீந்திரன்

(கி.வசந்தன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டம் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு முரணாகச் செயற்பட்டிருப்பதால் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான ஒரு விண்ணப்பத்தினை செய்யுமாறு நீதிமன்றம் எங்களிற்கு அறிவுரை வழங்கி இருக்கின்றது எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி மீதான வழக்கு தொடர்ந்த மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கனகசபை ரவீந்திரன் தெரிவித்தார்.

வவுனியா நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் மார்ச் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை கூட்டம் சட்டரீதியற்றது என தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியக் குழு உறுப்பினர்களான சுதாகரன் மற்றும் சூரியபிரபாவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (28) இந்த வழக்கானது வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. கடந்த முறை எதிர்த்தரப்பினராகிய வீ.ஆனந்த சங்கரி உட்பட ஏனையோர் சார்பாகத் தோன்றிய சட்டத்தரணி வழக்காளிகளால் கோரப்பட்ட நிவாரணங்களை வழங்குவதில் தங்களுக்கு எவ்விதமான ஆட்சேபனைகளும் இல்லை என்று தெரிவித்திருந்தார்கள். அத்தோடு இவ்வழக்கைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள வேறு ஒரு தினத்தையும் கேட்டிருந்தனர்.

மேலும், சமாதானத்திற்காகக் கோரியிருந்தாலும் கூட, சமாதானத்திற்கு முன்னரான தினமே இன்னுமொரு சட்ட விரோத கூட்டத்தினை கூட்டி அதில் சில தீர்மானங்களை எடுத்ததுடன், சில உறுப்பினர்களையும் கட்சியிலே சேர்த்திருந்தனர். குறித்த நடவடிக்கையும் சட்டவிரோதமானது. ஏல்னெனின், நீதிமன்றத்தால் இடைக்கால கட்டளை வழங்கப்பட்டிருந்த போதும் அதனை மீறி தமிழர் விடுதலைக் கூட்டணியின் எதிராளிகளினால் குறித்த கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது.

குறித்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் சட்டவிரோதமானது என அதனையும் இரத்துச் செய்யக்கோரி நீதிமன்றத்தில் கேட்டிருந்தோம். நீதிமன்றமானது ஏற்கனவே வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைக்கு எதிரான வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் செயற்பட்டமையால் குறித்த கட்சியின் பொதுச்சபை கூட்டமானது, சட்டரீதியற்றது என்றும், இங்கே நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு முரணாக இவர்கள் செயற்பட்டிருப்பதால் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான ஒரு விண்ணப்பத்தினை செய்யுமாறு நீதிமன்றம் எங்களிற்கு அறிவுரை வழங்கி இருக்கின்றது. மீண்டும் இவ்வழக்கானது விசாரணைக்காக ஏப்ரல் 30ம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்களான மனுதாரர்கள் சார்பாகச் சட்டத்தரணி கனகசபை ரவீந்திரன் மற்றும் கீர்த்தனன் ரவீந்திரநாதன் முன்னிலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க

# "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்" அழைப்பு

(பு.கஜிந்தன்)

சிறிலங்கா தேசத்தின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தீர்மானித்துள்ளதாக அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை ஒவ்வொரு ஆண்டும் பெப்பிரவரி 4ம் திகதியை சுதந்திர தினமாக கொண்டாடி வருகின்றது. ஆயினும் அன்றைய தினமே பறிக்கப்பட்ட தமிழர் தேசத்தின் இறையாண்மை, ஆங்கிலேயரிடமிருந்து சிங்கள பேரினவாதிகளுக்கு கைமாற்றப்பட்ட தினமாகும். வரலாற்றுரீதியாக இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு பகுதிகள் ஒன்றிணைந்த பகுதிகள், இத்தீவின் மூத்த குடிகளான தமிழ் மக்களின் தாயக பூமியாக இருந்தது என்பதையும், அந்த தாயகபூமி இறையாண்மை உள்ள தனித்தேசமாக இருந்தது என்ற வரலாற்று உண்மையை மறுதலித்து எமது சுதந்திரம் சிங்கள தேசத்திடம் கையகப்படுத்தப்பட்ட நாளாகவே இந்நாள் உள்ளது.

இன்று தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் ஆட்சி ஏறி உள்ள ஜனதா விமுத்தி பெரமுன (JVP) எனும் சிங்கள அடிப்படைவாத கட்சி தம்மை மாற்றத்தின் நாயகர்களாக காட்ட முற்பட்டாலும் அவர்களின் உண்மை முகம் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டே இருக்கின்றது. என்றுமில்லாதவாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி ஏறியவர்கள் இலங்கை தீவின் அதி உச்ச பிரச்சினையான தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாக எவ்வித அக்கறைகளுமின்றி, ஏன் அவ்வாறான ஒரு பிரச்சினையே இல்லை என்ற கோதாவிலேயே நடந்து வருகின்றனர். அத்துடன் சிங்கள பேரினவாதத்தால் இனத்தின் மீதான இனவழிப்பினை மறுதலித்து, அலட்சியத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் இறந்து விட்டதாக கூறுகின்றனர். அரசியல் கைதிகள் யாரும் இல்லை என முன்னைய அரசாங்கங்களைப் போலவே தமிழ் மக்களின் போராட்டத்தினை பயங்கரவாதமாகவே சித்தரிக்க முயல்கின்றனர்.

மேற்கூறிய விடயங்களை கருத்தில் கொண்டு வரும் சுதந்திர தினத்தை தொடர்ச்சியாக தமிழர் தேசம் கரிநாளாக அனுசரித்தது போலவே இம்முறையும் அனுசரிக்க அறைகூவல் விடுக்கின்றோம். சிங்கள தேசம் தமது சுதந்திர தினத்தை கொண்டாடும் அதே நாளை நாம் சுதந்திரத்தினை இழந்த நாளாக கருத்தில் கொண்டு பொதுவிடங்கள், கடைகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், வணக்கத்தலங்கள், எமது வீடுகள் என்பவற்றில் கறுப்பு கொடிகளை கட்டி உங்களின் எதிர்ப்பினை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என பேரெழுச்சி இயக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியாவில் சாதித்த வடமாகாண மாணவர்கள் கௌரவிப்பு





இந்தியா மதுரையில் இடம்பெற்ற சிலம்பம் மற்றும் கராத்தே போட்டிகளில் 36 முதலிடங்களைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் தலைமையில் மானிப்பாய் அன்னை மரியாள் ஆலயத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து சிவலீமன் சிலம்ப கழக மாணவர்களும் பாபு இஷின் ரியூ கராத்தே பாடசாலை மாணவர்கள் உள்ளடங்கிய 20 பேர் கொண்ட குழு இந்தியா மதுரையில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான கராத்தே மற்றும் சிலம்பம் போட்டியில் பங்கு பற்றினர். போட்டியில் பங்கு பற்றிய வடக்கு மாணவர்கள் 36 முதல் பரிசுகளையும், 08 இரண்டாவது பரிசுகளையும், 05 மூன்றாவது பரிசுகளையும் பெற்றதோடு 95 கேடயங்களை தம் வசமாக்கினர்.

போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் புதன்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தமை குறிப்பிடத்க்காது.

# காணாமல் போன வெளிநாட்டு பிரஜை யாழில் கண்டுபிடிப்பு

(பு.கஜிந்தன்)

அநுராதபுரத்தில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் காணாமல் போன நிலையில் நேற்று முன்தினம் அவர் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மூன்று சுற்றுலாப் பயணிகள் பிரான்ஸிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த நிலையில் அவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் காணாமல் போயுள்ளார். இது குறித்து அநுராதபுர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த வெளிநாட்டுப் பிரஜை நேற்று முன்தினம், யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் யாழ்.நகரப் பகுதியில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## மன்னார் நீதிமன்றத்தின் முன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்;

# கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று புதன்கிழமை(29) உத்தரவிட்டார். நேற்று (29) கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபரைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மேலும் மன்னார் நீதிமன்றத்தின் மூடிய அறைக்குள் தனித்தனியாக அடையாள ஆள் அணிவகுப்பு இடம்பெற்றது.

இந்த நிலையிலே ஏற்கனவே கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது. மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்தவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததோடு,பெண் ஒருவர் உள்ளடங்கலாக இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கையின் போது பிரதான சந்தேக நபர்கள் உள்ளடங்கலாக 5 பேரை மன்னார் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களில் இராணுவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் அடங்குகின்றனர்.

குறித்த 5 பேரும் விளக்க மறியலில் வைக்கப்பட்ட நிலையில் புதன்கிழமை(29) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த 5 சந்தேக நபர்களையும் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களை அனுமதியோம்

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)



மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்தும் இதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து கொள்ளத் தென்பகுதியிலிருந்து சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை(28) மன்னாரிற்கு வருகை தந்தனர். வருகை குறித்த குழுவினர் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இடம்பெறுகின்ற பகுதிகளுக்குக் கள விஜயத்தை மேற்கொண்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து மன்னார் பிரஜைகள் குழுவில் புதன்கிழமை (29) காலை மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர்,பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள்,பெண்கள் அமைப்பு,பொது அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர் மன்னார் தீவு பகுதிகளுக்குச் சென்று மக்களிடம் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்துத் தெளிவுபடுத்தினர்.

இதன் போது கலந்து கொண்ட பிரதிநிதிகள் மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிம மண் அகழ்வினால் மன்னார் தீவில் ஏற்பட்டு வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்துத் தெளிவு படுத்தினர். குறிப்பாகக் காற்றாலை மின் உற்பத்தியால் மீனவர்கள்,கர்ப்பிணிப் பெண்கள் உள்ளடங்கலாக மன்னார் தீவில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் மன்னாரில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மண் அகழ்வினால் மன்னார் தீவு அழியும் நிலை உள்ளமை குறித்தும் தெரிவாக்கப்பட்டது.

கனிய மணல் அகழ்வினால் ஒரு கட்டத்தில் கடல் நீர் கிராமங்களுக்குள் ஊடுருவும் நிலை உள்ளமை குறித்தும் குறித்த குழுவினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து விசேட ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் மற்றும் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே ஆகியோர் கருத்து தெரிவித்தனர். மன்னார் தீவுப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இப்பகுதியில் தேவையில்லை எனத் தெரிவித்தனர். சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் கடந்த 5 ஆண்டுகளாகக் குறித்த விடயம் குறித்து தம்முடன் இணைந்து கடமையாற்றி வருவதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் குறிப்பிட்டார். மக்களின் வாழ் விடங்களைப் பாதிக்காத வகையில் பெரு நிலப்பரப்புகளில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை முன்னெடுக்க முடியும். மேலும் கனிய மணல் அகழ்வை நாங்கள் முற்று முழுதாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 40 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஐவர் கைது

(பு.கஜிந்தன்)



யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவின் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு இணைந்து நடத்திய சுற்றிவளைப்பில் 40 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தின் போது பரந்தன் பகுதியில் வைத்து ஒருவரும் முழங்காவில் பகுதியில் வைத்து நால்வருமாக 5 இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைப் பெண்களின் விற்பனைத் தளம்!



திவ்யா கோவிந்தன்

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்பார்கள் ஆனால் நவீன தொழில்நுட்பங்களிலும் நாகரீகங்களிலும் உச்சத்தைத் தொட்டுவிட்டதாக மார்தட்டிக் கொள்ளும் காலத்தை எட்டிய போதும் உலகமெங்கும் பெண்கள் ஒடுக்கப்படுவதும் வன்முறைக்குள்ளாக்கப்படுவதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சமத்துவமாக வாழ்வதற்கான உரிமை உள்ள நிலையில் அந்த உரிமையை அனுபவிப்பதற்கு பூரண உரித்துடையவர்களாக பெண்கள் உள்ளனர்.

ஆனால் உலகில் மனித நாகரீக வளர்ச்சியுடன் இணைந்ததாக ஆணாதிக்கச் சிந்தனைகளும் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளும் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலும் கிளை பரப்பி ஆழமாக வேரூன்றியுள்ளன. பெண்கள் வீடுகளிலும், தொழில் புரியும் இடங்களிலும் பொது இடங்களிலும் பாலியல் மற்றும் உணர்வு ரீதியில் பல்வேறு வகையில் வன்முறைகளை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை தமது குடும்பத்தின் நலனுக்காக தமது இன்ப, துன்பங்களைத் தியாகம் செய்து தமக்கு முற்றிலும் அறிமுகமற்ற **வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பை நாடி சென்ற பெண்கள் பாலியல் தொழிலாளிகளாக விற்கப்பட்ட கொடூரம்** அம்பலமானமை முழு நாட்டையும் அதிர்ச்சியில் ஆழ்ந்தியது நாமறிந்ததே.

மத்திய கிழக்கு நாடுகளில் செயற்படும் இடைத்தரகர்களால் வாரி இறைக்கப்படும் பணத்திற்கு மயங்கி உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களால் தயவு தாட்சண்யமின்றி அரங்கேற்றப்பட்ட, பெண்களை பாலியல் சேவைக்காக ஆட்கடத்தும் நாடகம் நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலைமையிலிருந்து தமது குடும்பத்தினரை மீட்க வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடிக் காத்திருக்கும் பெண்கள் பலரினதும் வயிற்றில் புளியைக் கரைப்பதாக அமைந்துள்ளது.

அத்துடன் நாட்டிற்கு அவர்கள் மூலம் கிடைக்கப்பெறும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கும் அச்சுறுத்தல் விடுப்பதாய் உள்ளது. மேற்படி முகவர் நிலையங்கள், கஷ்டத்தில் தம்மை அணுகும் பெண்களை நல்ல இடத்தில் வீட்டுப்பணிப்பெண் வேலையொன்றைப் பெற்றுத்தருவதாகவும் மாதங்களில் குடும்ப கஷ்டம் அனைத்தும் தீர்ந்து சுபீட்சமான வாழ்வு வாழலாம் எனவும் ஆசை வார்த்தைகளை கூறியே வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்களை பணிப்பெண்களாக அனுப்பும் பட்சத்தில் இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தின் கெடுபிடிகளை சந்திக்க நேரிடும் என்பதால் அவற்றைத் தவிர்க்க அந்தப் பெண்கள் அனைவரும் சுற்றுலா விசா மூலமாக அனுப்பப்படுகின்றார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றை அடைந்ததும் இடைத்தரகர்களிடம் ஒப்படைக்கப்பட்ட அந்தப் பெண்கள் சந்தையில் ஆடு, மாடுகளை விற்பது போல் வரிசையாக நிறுத்தப்பட்டு ஏலத்தில் விலை பேசப்பட்டுள்ளனர்.

ஒரு பெண்ணின் இளம் வயது, அழகிய தோற்றம் என்பவற்றைப் பொறுத்து அவர்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. வியர்வை சிந்தி பணியாற்றி தமது குடும்பத்தைக் காப்பாற்ற கனவுகளுடன் வந்த அந்தப் பெண்கள் அந்நாடுகளின் செல்வந்த சுகபோகிகளுக்கு மோகப்பொருட்களாக மாறுவதற்கு தயார்படுத்தப்பட்டனர். இந்நிலையில் எப்பாடுபட்டாவது அந்த நரகத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற பரிதவிப்புடன் அங்குள்ள அதிகாரிகளிடம் உதவி கோரிய பெண்களில் சிலர் அந்த அதிகாரிகளில் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

படுபாதாளத்தில் சென்று கொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதார நிலையையும் அதனால் குடும்பங்கள் எதிர்கொண்டுள்ள அவல நிலையையும் தமக்குச் சாதகமாக்கி பணம் சம்பாதிக்க முயற்சிக்கும் ஈவிரக்கமற்ற முகவர்களுக்கு வறுமையில் வாடும் அப்பாவிப் பெண்கள் பலிக்கடாவாகி வருகின்றனர். மேற்படி வெளிச்சத்துக்கு வந்த சம்பவத்தை விடவும் அம்பலமாகாத, இருட்டடிக்கப்பட்ட சம்பவங்கள் எத்தனையோ இருக்கலாம், இதுவரை இலங்கையிலிருந்து அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பெற்றுத்தருவதாக கூறி அனுப்பப்பட்டிருப்பதாகவும், மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிகமான பெண்கள் அழைத்து செல்லப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் குறிப்பிடப்படுகின்றன.

வடக்கு, கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏழு மாவட்டங்களிலிருந்தும் பெண்கள் வெளிநாடுகளுக்கு பணிக்காக அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

அதிலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் உள்ள பெண்கள் அதிகமாக அழைத்து செல்லப்பட்டார்கள் என்ற தகவலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி. மன்னார் ஆகிய மாவட்டங்களில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள் ஏமாற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

அவ்வாறு அழைத்து செல்லப்படுகிறவர்களில் 70 சதவீதமானவர்கள் கிராமங்களை சேர்ந்த குடும்பப் பெண்களே. குடும்பங்களின் வறுமை நிலையை அறிந்து கொண்டு பெண்களை அடையாளம் கண்டு வெளிநாட்டுக்கு அனுப்பும் கொழும்பைத் தளமாகக்கொண்ட முகவர்கள் கிராமங்கள் தோறும் துணை முகவர்களை கண்டுபிடித்து வறிய குடும்பப் பெண்களை மூளைச்சலவை செய்கிறார்கள்.

வெளிநாடு செல்வதற்குரிய நிபந்தனை என்ன? விபரம் என்ன? என்பது அவர்களுக்கு தெரிவதுமில்லை, தெரியப்படுத்துவதுமில்லை. இலங்கை அரசாங்கம் மத்திய கிழக்கு நாடுகளுடன் ஒப்பந்தங்களை எவ்வாறு செய்கின்றதென்றால் பெண்களை வேலைக்கு அழைப்பதாக இருந்தால் அவர்களுக்கு ஆரம்பத்தில் கொடுப்பனவு ஒன்று வழங்கவேண்டும்.

எக்காரணம் கொண்டும் கொடுத்த முற்பணத்தை அவர்கள் எதிர்கால சம்பளத்தில் கழிக்கப்படக்கூடாது, அதுவுமன்றி கொடுத்த முற்பணத்தை கடனாகவும் கருதக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் தான் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது.





**வெளிநாடு செல்வதற்குரிய நிபந்தனை என்ன? விபரம் என்ன? என்பது அவர்களுக்கு தெரிவதுமில்லை, தெரியப்படுத்தப் படுவதுமில்லை.**

பெண்களுக்கு வழங்கப்படும் இம் முற்பணமானது நாட்டின் நிலமைகளைப் பொறுத்து இரண்டு இலட்சம் தொடக்கம் ஆறுலட்சம் வரை வேறுபட்டுக் காணப்படும். இப்பணத்தை சூறையாட உதவி முகவர்கள் என்ன தந்திரத்தை பாவிக்கிறார்கள் என்றால், இப்பணம் பற்றிய விபரமோ, தகவலோ அழைத்து செல்லவிருக்கும் பெண்களுக்கு சொல்லப்படுவதுமில்லை, அவர்களுக்கு அந்த விபரம் தெரியப்படுத்தப்படுவதும் இல்லை.

மத்திய கிழக்கிலுள்ள வேலை கொடுப்பவர்கள் இப்பணத்தை கொடுத்து விட்டு, முகவர்கள் உரிய பெண்களுக்கு கொடுத்துள்ளனரா? அவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? என்ற விபரம் பற்றி அக்கறை கொள்ளுவதில்லை. அதை அவர்கள் அறிய விரும்புவதுமில்லை. டுபாய், குவைத், ஓமான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கே பணிப்பெண்களாக இவர்கள் பெரும்பாலும் அழைத்து செல்லப்படுகிறார்கள். மேற்படி நாடுகளுக்கு அழைத்து செல்லப்படுபவர்கள் பலவிதமான பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

தாம் எப்படி அழைத்து செல்லப்படுகிறோமென்று செல்லும் பெண்களுக்கு தெரியாது. அந்தளவுக்கு அப்பெண்கள் அறிவுடையவர்களும் அல்லர்.

தாங்கள் என்ன விசாவில் செல்கிறோம் என்பதை கூட அறிவதில்லை. வெளிநாட்டுப் பணியகத்தில் பயிற்சி எடுத்த பின்பே செல்லவேண்டும். தாங்கள் வெளிநாடு செல்வதற்கான காப்புறுதி மட்டுமன்றி திருமணமாகிய பெண்ணொருத்தி வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாக செல்லவேண்டுமாயின் அவருக்கு ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகள் இருக்கக்கூடாது. அவ்வாறு இருப்பவர்களுக்கு வெளிநாட்டுப் பணியகம் அனுமதி வழங்காது. ஆனால் அண்மையில் இந்த விதியை அரசாங்கமும் தளர்த்தியுள்ளது. வேலைவாய்ப்பை பெற்றுப்போகும் பெண் மேற்படி நிபந்தனைகளுக்கு அமைய செல்கிறாரா? இல்லையா? என்ற அறிக்கையை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டும். கிராமசேவகர், நன்நடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குடும்ப பின்னணியை உறுதிப்படுத்தவேண்டும். மேற்படி விதிமுறைகளை மீறி வெளிநாடு சென்று வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்கள் நாடு திரும்பும் பட்சத்தில் அவர்களை அவர்களது குடும்பமும் சமூகமும் பச்சாதாபத்துடன் ஏற்குமா அல்லது பாவிகளாகப் பார்த்து வெறுத்து ஒதுக்குமா என்பது இறைவனுக்கு மட்டுமே வெளிச்சம்.

பொருளாதார நெருக்கடியால் அடுத்த வேளை உணவிற்கும் வாழ்விற்கும் என்ன செய்யப் போகிறோம் என புரியாது மன இறுக்கத்திற்கு உள்ளாகி, தமது சுயத்தை இழந்து மனநலம் பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்ட பெண்களும் ஏராளமாக உள்ளனர்.

பெண்கள் தாம் பணியாற்றும் இடங்களிலும், பாலியல் மற்றும் உளவியல் ரீதியான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குள்ளாவது ஆங்காங்கே தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எனும் போது அவர்களை அடித்து உதைப்பது, தீயால் சுடுவது, கல்வி கற்கும் உரிமைகளுக்கு தடை விதிப்பது, திறமைகளை நசுக்குவது, உறவு மற்றும் நட்பு ரீதியான அவர்களது உறவுகளுக்கு முட்டுக்கட்டை போடுவது என்பவற்றுடன் வார்த்தைகள் வடிவிலான சொற்பிரயோகத் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன.

உடலியல் ரீதியில் ஏற்பட்ட காயங்கள் வேண்டுமானால் காலப்போக்கில் ஆறலாம். ஆனால் உள்ளத்தை ஆழ ஊடுருவி தீராத ரணத்தை ஏற்படுத்தக் கூடிய வார்த்தைப் பிரயோகங்களால் ஏற்படும் காயங்கள் காலத்திற்கும் நீடித்து சித்திரவதைப்படுத்தக் கூடியவையாகும்.

பாலியல் ரீதியான வன்முறை, குடும்ப வன்முறை, பால்நிலை ரீதியான துன்புறுத்தல், பலவந்த கருக்கலைப்பு, பெண் சிசுக்கொலை, மகப்பேற்றுக் கால வன்முறை, கௌரவக் கொலை, வரதட்சனைக் கொடுமை, மத ரீதியில் பெண் உறுப்பு சிதைப்பு, கட்டாய திருமணம், ஆட்கடத்தல், அடிமை வாழ்க்கை, அதிகார வர்க்கத்தினரின் வன்முறை, கட்டாய விபச்சாரம், முதுமை காலத்தில் கைவிடப்படுதல், கல்லால் அடித்தல், தீக்குளிக்க நிர்ப்பந்தித்தல் உள்ளடங்கலாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் தண்டனை வழங்கல்களும் இடம்பெறுவது தொடர்ந்து கொண்டு தான் வருகின்றன.

ஒரு தாயாக, மனைவியாக, மகளாக ஒவ்வொரு குடும்பத்தினதும் ஆதார தூண்களில் ஒன்றாக இருந்து வரும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு தனிநபர், குடும்பம். சமூகம் மற்றும் அரசாங்கம் என சகல மட்டத்திலும் ஏற்படும் போதே மேற்படி வன்முறைகளை ஒழிப்பது சாத்தியமாகும். இது ஒரு நாளில் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதியில் எட்டப்படக் கூடிய ஒன்றல்ல. இதற்கு சம்பந்தப்பட்ட அனைவரது அர்ப்பணிப்பும் மிக நீண்ட கால அடிப்படையிலான ஒத்துழைப்பும் அவசியமாகும்.








# தேசிய மக்கள் சக்தியின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு



(எம்.யூ.எம்.சனூன்)

தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர செயற்குழுவினர் புத்தளம் நகரம், முள்ளிபுரம், ரத்மல்யாய ஆகிய பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் பைஸல் அவர்களின் ஒத்துழைப்புடன் இவ்வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவற்றின் ஒரு நிகழ்வாக (27) புத்தளம் நகர சபை செயலாளர் எல்.ஜீ.பி. பிரீத்திக்கா, தொழிநுட்ப உத்தியோகத்தர் கே.கஸானி ஆகியோருடன் பொறியியலாளர் ரின்ஷ ாத் அஹ்மத், சர்ராஜ் லாபிர், ஆசிரியர் சிபாக், நப்லான் நபீஸ், மொஹமட் பஸ்ரின் ஆகியோர் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர குழுவினர் நீண்ட காலமாக புனருத்தாபனம் செய்வதற்கான தேவைகள் காணப்படும் இடங்களுக்கு கள விஜயமொன்றை மேற்கொண்டனர்.

புத்தளம் கே.கே. வீதி முதல் மரிக்கார் வீதி சந்தி வரை பழுதடைந்துள்ள இடங்களை திருத்தம் செய்து செப்பனிடலும், சீமாவெளி உள்ளக வீதிகளை செப்பனிடல் மற்றும் மழை நீர் வழிந்தோடுவதற்கு கால்வாய் அமைத்தல்.

கடையாக்குளம் வீதி முழுமையாக புனருத்தாபனம் செய்யப்படவுள்ள நிலையில் கடையாக்குளம் வீதியின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக குன்று குழிகளை வெட்டி சீர்படுத்துதல் மற்றும் மதகுகளை அமைத்தலும்.

செம்மந்தளுவை உள்ளக வீதிகளில் குன்று குழிகளை வெட்டி சீர்படுத்துதல், மழை நீர் வழிந்தோடுவதற்கு கால்வாய் அமைத்தல், மதகுகளை அமைத்தல்.

வான் சந்தி நெடுங்குளம் குளத்துக் கட்டு நடைபாதை புல் வெளியில் கதிரைகள் அமைத்தலும் அலங்கரிப்பும்.

இப்புனருத்தாபன பணிகள் தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர செயற்குழுவினர் அந்தந்த கிராமங்களில் நடத்திய மக்கள் சந்திப்புக்களின்போது கூறப்பட்ட பல்வேறு தேவைகளில் இருந்து, புத்தளம் நகர சபை ஊடாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக இக்கள விஜயம் அமையப்பெற்றது.

# வைத்தியசாலை குறைகளைக் கேட்டறிந்தார் இம்ரான் எம்பி




(மூதூர் புஹாரி)

திருகோணமலை, தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் நிலவும் குறைநிறைகள் தொடர்பாக கேட்டறிவதற்காக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் நேற்றுப் புதன்கிழமை (29) தோப்பூர் பிரதேச வைத்தியசாலைக்கு வருகைதந்தார்.

இதன்போது தோப்பூர் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்களிடம் , வைத்தியசாலை தொடர்பான குறைபாடுகள்,தேவைகள் மற்றும் ஆளணிப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை கேட்டறிந்து கொண்டார்.

இவ் விஜயத்தில் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர்,ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# புனித மிஃராஜ் தின தேசிய நிகழ்வு கொழும்பில்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புனித மிஃராஜ் தின தேசிய நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இரவு கொழும்பு - 10, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலில் நடைபெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு -10, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வுக்கு முஸ்லிம் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களான என்.நிலூபர், அலா அஹமட், கணக்காளர் முஹம்மட் நிப்ராஸ் உட்பட திணைக்கள அதிகாரிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.முப்தி, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஏ.சீ.எம். பர்ஸாத் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலின் பிரதம இமாம் அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (பௌசி) மிஹ்ராஜ் இரவின் முக்கியத்துவத்தைப் பற்றி பயான் நடாத்தினார்.

# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களை பார்வையிட்ட அதிகாரிகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடைக்கு தயாரான பல நெல்வயல் நிலங்கள் வெள்ளத்தினாலும் இரணைமடுக்குளத்தினுடைய வான் கதவுகள் திறந்து விடப்பட்டமையால் அழிவடைந்திருந்தன. இந்த வயல் நிலங்களைப் பார்வையிட கமநல காப்புறுதி சபை உத்தியோகத்தர்கள் மற்றும் கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள் நேற்று சென்றனர்.

அழிவடைந்த பகுதிகளை கமநல காப்புறுதிச்சபை மற்றும் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள் பார்வையிட்டதோடு கண்டாவளை, முரசுமோட்டை,



பன்னங்கண்டி, உருத்திரபுரம் பெரியகுளம் உள்ளிட்ட பகுதிகளையும் சென்று பார்வையிட்டனர்.

# சமாதான நீதவானாக அப்துல் ஹக்கீம் சத்தியப் பிரமாணம்

(ஏ.எச்.ஏ.ஹூஸைன்)



ஓட்டமாவடி – 3ஆம் வட்டாரம் எல்லை வீதியைச் சேர்ந்த எம்.சி. அப்துல் ஹக்கீம், அகில இலங்கை சமாதான நீதவானாக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எச். எம். முஹம்மட் பஸீல் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சமூக செயற்பாட்டாளரும், மஸ்ஜித் மஸீத் ஸாலிஹ் அல் மஸீத் பள்ளிவாசல் பொருளாளருமான இவர், ஏ.எல்.எம். காஸிம், ஏ.பி. சித்தி ரஸீனா தம்பதிகளின் புதல்வராவார்.

# குளவிக்கொட்டுக்கு இலக்கான 15 பேர் வைத்தியசாலையில் அனுமதி

குளவிக்கொட்டுக்கு இலக்கான ஒன்பது பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 15பேர் கிளிநொச்சி தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியில் வீதியிலிருந்த குளவிக்கூடு கலைந்தமையால், வீதியால் சென்ற பாடசாலை மாணவர்கள் ஒன்பது பேரும் வீதியால் பயணித்தவர்கள் ஆறுபேரும் கிளிநொச்சி தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்ணகிநகர் அம்பிகை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

# முகம்மட் அம்றினுக்கு 146 புள்ளிகள்

(எம்.ரீ.ஆரிப்)



நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட இஹலஃபுளியங்குளம் முஸ்லிம் வித்தியாலய மாணவன் இக்பால் முகம்மட் அம்ரின் 146 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர் அப்துல் காதர். இக்பால் மற்றும் சமூன் சியானா ஆகியோரின் புதல்வராவார்.

# மதுபோதையில் குளத்தில் பாய்ந்தவர் காப்பாற்றிய பின் மீண்டும் குளத்தில் குதிப்பு

மதுபோதையில் குளத்தில் பாய்ந்த நபரை காப்பாற்றிய பின்பும் மீண்டும் குளத்தில் குதித்து காணாமல் போன சம்பவம் கிளிநொச்சியில் பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் நேற்று ஆலயத்தின் தீர்த்தோற்சவ நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மது போதையில் அப்பகுதிக்கு சென்ற நபர் ஒருவர் குளத்தில் பாய்ந்துள்ளார். சிலர் அவரை தூக்கி வெளியில் எடுத்துள்ளனர். பின்னர் மீண்டும் குளத்தில் பாய்ந்துள்ளார்.

குறித்த நபர் பல மணி நேரம் மேலே வராத நிலையில், அப்பகுதி இளைஞர்கள் காணாமல் போனவரை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய கணேசமூர்த்தி ரமேஷ் எனும் இளம் குடும்பஸ்தரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

# "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள்" இரு நூல்களின் வெளியீடு இன்று



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள இரு தமிழ் நூல்க ளின் வெளியீட்டு விழா இன்று 30 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கொழும்பு - 07 இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான ரவூப் ஹக்கீம் எழுதியுள்ள "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள்" என்ற நூலும் பேராசிரியர் ராஜன் ஹூல் ஆங்கிலத்தில் எழுதிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆங்கில நூலின் தமிழ் மொழி பெயர்ப்பான "உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் மறைக்கரம் வெளிப்பட்ட போது" என்ற பெயரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள நூலும் இன்று வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், ஜனாதிபதி சட்டத்தரணிகளான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். எம். சுஹைர், எம். ஏ.சுமந்திரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் மஹிந்த ஹத்தக ஆகியோர் உரையாற்றவுள்ள தோடு, நூல் விமர்சனத்தை பேராசிரியர் எம்.எஸ். எம். அனஸ் நிகழ்த்தவுள்ளார்.

# சமாதான நீதவானாக யஸீர் அறபாத் சத்தியப்பிரமாணம்



மாவடிச்சேனை, பஸீர் வீதியைச்சேர்ந்த முஹம்மது நஸீர் முஹம்மது யஸீர் அறபாத் அகில இலங்கை சமாதான நீதவானாக (28) செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எச்.எம்.முஹம்மட் பஸீல் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தென்கிழக்கு பல்கலைக்கழக இளங்கலைப் பட்டதாரியும், மாவடிச்சேனை மஸ்ஜித் மஸீத் ஸாலிஹ் அல் மஸீத் பள்ளிவாயலின் செயலாளரும் பத்தி எழுத்தாளருமான இவர், இளம் சமூகச் செயற்பாட்டாளருமாவார்.

மாவடிச்சேனை அல்-இக்பால் வித்தியாலயம் மற்றும் ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) என்பவற்றின் பழைய மாணவரான இவர் முஹம்மது நஸீர், மர்ஹூமா பாத்திமா தம்பதிகளின் புதல்வருமாவார்.

# அனுராதபுரம் மாவட்டத்தில் 21 மணி நேரம் நீர் விநியோகம் துண்டிப்பு

அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் காரணமாக நேற்று (29) இரவு 9.00 மணி முதல் இன்று (30) மாலை 06.00 மணி வரையில் பல்வேறு பிரதேசங்களுக்கு 21 மணி நேரம் நீர் விநியோகம் துண்டிக்கப்படுமென்று தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

குறிப்பாக அனுராதபுரம் வடக்கு நீர் விநியோக அமைப்பு கலத்தேவ, நெலும்கன்னியா, தரியங்குளம், கல்குளம், கவரெக்குளம், வண்ணம்மடுவ, குஞ்சிக்குளம், குருந்தன்குளம், மாத்தளை சந்தி, சாலிய மாவத்தை, தன்னயன்குளம், யாழ்ப்பாண சந்தி, பண்டாரபுளியங்குளம், தெப்பன்குளம், ஜெயந்திகிராமம், சாலியபுர, மங்கலவல, லிங்கலபார, கட்டமான்குளம் போன்ற பிரதேசங்களும்.

இதேவேளை, அனுராதபுரம் புதிய நகர நீர் வழங்கல் அமைப்பு - அனுராதபுரம் கட்டம் 1, மிஹிந்தலை நீர் விநியோக அமைப்பு கந்துவட்டபார, ருவங்கம, வெல்லமொரண, தரியங்குளம், பலுகஸ்வெவ, சட்டம்பிகுளம், அம்பதலாகம, பொலிஸ் கிராமம், மஹிந்த ராஜபக்ஷ மாவத்தை என்பனவும் அடங்கும்.

# ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கைது

(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதிரியா வீதியில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி ஊழல் ஒழிப்பு பிரிவுக்கு பொறுப்பான உப பொலிஸ் பரிசோதகர் கே.எல். எம்.முஸ்தபா தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 370 மில்லி கிராம் ஐஸ் போதை பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (29) ஆஜர்படுத்திய போது அடுத்த மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# வங்குரோத்து அடைந்த நாடு முன்னோக்கி நகர்ந்திருக்கிறது



(வெல்லாவெளி நிருபர்)

அரசாங்கம் நாட்டை பொறுப்பேற்கும் போது நாடு ஒரு வங்குரோத்து அடைந்த நாடாகத்தான் அமைந்திருந்தது. தற்போது நாடு ஓரளவேனும் முன்னோக்கி நகர்ந்திருக் கிறது. இவ்வாறு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவரும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னருமான கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை (29) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது தலைமையுரையாற்றிப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தது போல், மக்கள் உரிமையை பெற்றுக் கொள்வதற்காக அரச நிறுவனங்களை நாடும்போது அரச அதிகாரிகள் பொறுப்போடு அதனை நிறைவேற்றி கொடுக்க வேண்டும்.

மக்கள் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த ஒரு சிரமத்தையும் எதிர்கொள்ளக்கூடாது என்பதையும் அரச அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே உறவு மிக நெருக்கமாக அமைய வேண்டும் என்ற அடிப்படையில் எமது வேலைத்திட்டங்களை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம்.

முதலாவதாக கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம். சுற்றுப்புறச் சூழலை மாத்திரம் கிளீன் செய்வதில்லை, அதனூடாக எங்கள் மனங்களிலும் மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்பதே இந்த கிளின் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் நோக்கமாக உள்ளது.

ஆகவே நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த நாட்டை ஒரு செழிப்பான நாடாக மாற்ற வேண்டும் அதற்கு அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். என அவர் இதன்போது தெரிவித்தார்.

# அக்கரைப்பற்றில் புகைப்படக் கண்காட்சி

(அக்கரைப்பற்று நிருபர்)




அக்கரைப்பற்று 'திண்ணை கலைக்கூட' அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட ஒளிப்பட திருவிழா புகைப்படக் கண்காட்சி அக்கரைப்பற்று மாநகரசபை நீர்த்தடாக வளாக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச கலைஞர்கள், புகைப்படப்பிரியர்கள், இளைஞர்களின் நலன் கருதி ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் புகைப்படக் கண்காட்சி நடைபெற் றது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலி ருந்தும் புகைப்படக்கலையில் தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற 10 சிறந்த புகைப்படக் கலைஞர்களின் தத்ரூபமாகவுள்ள கதை சொல்லும் புகைப்படங்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் அமைப்பாளர் அப்துல் ஹமீத் தாஹிர் உரையாற்றுகையில் புகைப்படக்கலை கலாசாரம், மொழி மற்றும் புவியியல் எல்லைகளைத் தாண்டி, வாழ்க் கையின் மெய்யாதாரத்தை வெளிப்படுத்தும் ஒரு நுட்பமான ஓவியம். இதில் மாணவர்கள் இளைஞர்கள் மாத் திரமன்றி வளர்ந்தோரும் முதியோர்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்வது அவர்களது உள்ளத்தையும் உடலையும் தூய்மைப்படுத்தும் ஒரு சாதனம் என்றும் குறிப்பிட்டார்.

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் தடுப்பது தொடர்பான தெளிவூட்டும் நாடகம்




(பேரின்பராஜா சபேஷ்)

சமூக மட்டத்தில் சிறுவர்களுக்கு எதிராக அதிகரித்துவரும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பது தொடர்பான தெளிவூட்டும் நாடகம் மட்டக்களப்பு கிரான் பொதுச்சந்தை மற்றும் கும்புறுமூலையிலும் நடைபெற்றது.

மட்டக்களப்பு வவுணதீவு தொடுவானம் கலாமன்ற இளைஞர், யுவதிகளின் முன்னெடுப்பில் குழந்தை நிதி (CHILD FUND) நிறுவனத்தின் நிதி அனுசரணையில் AU LANKA அமுலபடுத்தும் திட்டதின் கீழ் வீதிநாடகம் அரங்கேற்றப்பட்டது.

சிறுவர்களை பாதிக்கும் இளவயது திருமணம், பாடசாலை இடைவிலகல், சிறுவர்களை பணிக்கு அமர்த்தல் போன்ற பல சிறுவர் துஷ்பிரயோகங் கள் தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டும் வகையில் வீதி நாடகம் மட்டக்களப்பு கிரான் பொதுச்சந்தை மற்றும் கும்புறுமூலையிலும் நடைபெற்றது.

அதிகரித்து வரும் பாடசாலை இடைவிலகல், சிறுவர் தொழிலாளர்கள் மற்றும் இளவயது திருமணம் போன்ற சிறுவர் துஷ்பிரயோகங்களை சமூக மட்டத்தில் குறைத்து பிள்ளைகளுக்கு உகந்த சூழலை உருவாக்கி அவர்களின் கல்வி அபிவிருத்தியுடனான சமூக மாற்றத்தை அடிப்படை நோக்கமாக கொண்டே இந்த விழிப்புணர்வு வீதிநாடகம் நெறிப்படுத்தப்பட்டு சமூக மட்டத்தில் அரங்கேற்றப்பட்டுவருகிறது.

# அக்கரைப்பற்று சமூக ஒழுங்கு அமைப்பினர் மாநகரசபை ஆணையாருடன் சந்திப்பு

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று மாநகரத்தில் கடந்த 03 வருடங்களுக்கு மேலாக சமூகப் பணியாற்றிவரும் அக்கரைப்பற்று (Social Regulators) சமூக ஒழுங்கு அமைப்பின் தலைவர் முனவ்வர் ஹசன் மற்றும் அமைப்பின் பிரதிநிதிகள் அக்கரைப்பற்று மாநகரசபையில் புதிதாக கடமையேற்றுள்ள ஆணையாளர் என். எம்.நௌபீசை சந்தித்து (28) மாநகரத்தில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சில கோரிக்கைகளை கையளித்தார்கள்.

அக் கோரிக்கையில் வீதியில் செல்லும் பாதசாரிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாகவும், பயங்கர விபத்துகளுக்கும் காரணமாக இருப்பதுடன், இரவு நேரங்களில் பயங்க ரமாக குரைத்து கொண்டு மக்களின் தூக் கத்தை இல்லாமலாக்கி வரும் கட்டாக்காலி நாய்களை மாநகர சபை எல்லைக்குள் இருந்து அகற்றுதல்.

மாநகரின் வீதி பெயர் பலகைகள் மிக மோசமான நிலையில் கிழிந்தும், சில உடைந்தும் வீதியில் விழுந்தும் கிடக்கக் கூடிய நிலையில் உள்ளதனால் வீதி பெயர் பலகைகள் அனைத்தையும் உடனடியாக சீர் செய்தல்,

அக்கரைப்பற்று நகரில் உள்ள பிரதான வீதியில் மின் கம்பங்களில் தொங்க விடப்பட்டுள்ள வெள்ளைக் கொடிகளை அகற்றுதல்.

மாநகரத்துக்கு வருமானம் வரக்கூடியதாக அறிவித்தல் பலகைகளை மக்கள் பார்க்கக் கூடிய பொருத்தமான இடத்தில் அமைத்து, தேவைப்படுவரின் அறிவித்தல்களை கட்டணம் பெற்று காட்சிப்படுத்தி மாநகர சபைக்கு வருமானம் ஈட்டக் கூடியதாக நடைமுறைப்படுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

இதன்போது சமூக ஒழுங்கு அமைப்பின் தலைவர் முனவ்வர் ஹசன்செயலாளர் ஏ.ஜி.ஷிஹாப்தீன், பொருளாளர் பௌசில் இப்ராஹீம், இணைப்பாளர் அஸ்மி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# அக்கரைப்பற்று ஸாஹிராவில் 29 மாணவர்கள் சாதனை

(றிஸ்வான் சாலிஹூ°)



அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட கமு/அக்/ஸாஹிரா வித்தியாலயத்தில் 29 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்து தமது கல்வி வலயத்தில் வரலாற்று சாதனை படைத்துள்ளார்கள்.

இதில் கடாபி ஹப்ஸா, விசாம் ஹாதீக் அஹமட், பஹ்மி அம்மார் ஆகிய மூன்று மாணவர்களும் 171 புள்ளிகளை ஒவ்வொருவரும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

பாடசாலை அதிபர் பரீதா நிப்ராஸின் வழிகாட்டலின் ஆசிரியர்களின் விடாமுயற் சியினால் இம்முறை அதிக மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

# நெல்லுக்கான நிர்ணய விலையை அரசாங்கம் தீர்மானிக்கவேண்டும்

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்றில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள இவ்வேளை, அரசாங்கம் நெல்லுக்கான நிர்ணய விலையை தீர்மானிக்க வேண்டு மெனவும் உலர்ந்த நெல்லை ஒரு கிலோ 155 ரூபாய்க்கும் ஈரமான நெல்லை ஒரு கிலோ 140 ரூபாய்க்கும் கொள்வனவு செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் கல்-ஓயா வலது கரை விநியோக வாய்க்கால் விவசாய அமைப்புகளின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கல்-ஓயா வலது கரை விநியோக வாய்க்கால் விவசாய அமைப்புகளின் சம்மேளனம் அம்பாறை, அக்கரைப்பற்று வீதியிலுள்ள சம்மேளன காரியாலயத்தில் பத்திரிகையாளர் மாநாட்டு செயலாளர் என். ரீ.உமர்பாரூக் தலைமையில் நடைபெற்றது. இந்த மகாநாட்டில்

தொடர்ந்து உரையாற்றிய செயலாளர் உமர் பாரூக், விவசாயிகளே நாட்டின் முது கெலும்பென எல்லோராலும் புகழாரம் சூட்டப்படும் விவசாயிகள் இன்று அதல பாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். எமது பிரதேசத்தில் அறுவடையின்போது தொடர்ந்து கன மழை பெய்து வந்ததால் விவசாயிகளாகிய நாம் பெரும் அசௌகரியங்களுக்குள்ளானோம்.

எனவே, அரசு எமக்கு உதவ முன்வரவேண்டும். ஈரமான நெல்லையும் கொள்வனவு செய்ய ஆவன செய்ய வேண்டும். அதே வேளை காய்ந்த நெல்லை நல்ல விலைக்கு எடுக்கவேண்டும். எல்லாவற்றிக்கு மேலாக நெல்லுக்கு ஒரு நிர்ணய விலையை தீர்மானிக்க வேண்டும். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க விவசாயிகளின் சகல பிரச்சினைகளையும் நன்கு அறிந்தவர். அவரின் ஆட்சிக் காலத்தில் எமக்கு விமோசனம் கிடைக்க கேட்டுக் கொண்டார்.



மாநாட்டில் தீவகாமி விவசாய அமைப்பின் தலைவர் எஸ். அத்து கொறல விவசாயிகளின் பிரச்சினை களையும் பற்றியும் உரையாற்றினார்.

# அட்டாளைச்சேனை தேசிய கல்வியற்கல்லூரி: பிரியாவிடையும் பதவியேற்கும் நிகழ்வும்



(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் சேவையாற்றிய பீடாதிபதிக்கான பிரியாவிடை நிகழ்வும், புதிதாக பதவியேற்கும் பீடாதிபதிக்கான பதவியேற்பு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (28) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தனது 40 வருட அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இவருக்கான பிரியாவிடை நிகழ்வு விரிவுரையாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் தொடருறு கல்விப்பிரிவின் விரிவுரை இணைப்பாளருமான ஏ.எஸ். எம். சதாத் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது புதிய பீடாதிபதி எம். சி.ஜுனைட், தொடருறு கல்விப்பிரிவின் உப பீடாதிபதி எம்.ஐ.ஜுஃபர். கல்விப்பிரிவின் உப பீடாதிபதி ஏ.ஜீ.அஹமட் நஸீர் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், ஆசிரிய பயிலுனர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆறாவது பீடாதிபதியாக எம்.சி.ஜுனைட் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப் பேற்றுக் கொண்டார்.

பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நியமனக்கடிதத்தின் பிரகாரம் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் நிதி மற்றும் நிருவாகத்திற்கான உப பீடாதிபதியாக இவர் கடமையாற்றியதுடன், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதியாகவும், மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முன்னாள் அதிபராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "வித்தகர் விருது" பெற்றார் கிருஷ்ண பிள்ளை

2023ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாணத்தின் உயரிய விருதான "வித்தகர் விருது" மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த கலாபூஷணம் இராசையா கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கு பல்துறைக்கு ஆற்றிவரும் பங்களிப்பிற்காக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் திருகோணமலையில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடாத்தப்பட்ட "தமிழ் இலக்கிய விழா நிகழ்வில்" பல்துறை சார்ந்து ஆற்றிவரும் சேவைக்காக குறித்த "வித்தகர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி்ஸ்.ரத்நாயக்க கிழக்கு மாகாண ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்களான, எச்.இ.எம்.டப்ளியு, ஜி.திசாநாயக்க, மதன்நாயக்க எம். கோபாலரெத்தினம், எம்.நசீர், குணநாதன் மற்றும் அரச உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.



இதன்போது முழுத் தீவிற்குமான சமாதான நீதவான் கலாபூஷணம் இரா சையா கிருஷ்ணபிள்ளை பொன்னாடை போர்த்தி, சான்றிதழ் மற்றும் விருது வழங்கி சபையோர் மத்தியில் கௌரவிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு ஆளுநர் – இலங்கை தொழில் நுட்பவியல் சேவையாளர் சங்கத்தினர் சந்திப்பு

(பு.கஜிந்தன்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளையினருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை காலை (29) இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது தொழில்நுட்ப சேவையாளர் சங்கத் தால் ஆளுநரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில்,

தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் பணியாற்றும் வடக்கு மாகாணத்தின் பல்வேறு திணைக்களங்களிலும் வேறுபட்ட விதங்களில் போக்குவரத்துப்படி வழங்கப்பட்டு வருவதாகவும் அதனை மீளமைக்குமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர். இடமாற்றங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறும் மனுவில் கோரியுள்ளனர்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங் களுக்கான பொறியியலாளர்களை நியமிக்குமாறும், தரக்கட்டுப்பாடு களை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக எந்திரவியல் பொருட்கள் ஆய்வு கூடங்களை அதிகரிக்குமாறும், ஊழலற்ற சிறந்த அபிவிருத்தியை அடைவதற்கு வேலை முன்னுரிமை உரியவாறு பெறப்பட்டதனை உறுதிப்படுத்த பல்வேறு தொகுதியினரை உள்ளடக்கி இறுக்கமாக கண்காணிக்குமாறும், தொழில்நுட்ப கணக்காய்வு தொகுதியை உருவாக்குமாறும், ஒரு வேலை நிறைவேற்றப்பட்டால்



அது மீண்டும் மேற்கொள்வதற்கான கால அவகாசம், பராமரித்தல் மற்றும் இயக்குதல் வழிகாட்டிகளை வெளியிடுவதுடன் இறுக்கமாக அதனை நடைமுறைப்படுத்துமாறும் ஆளுநரிடம் கையளித்த மனுவில் கோரியுள்ளனர்.

வடக்கு மாகாண பிரதம செயலர், பிரதிப் பிரதம செயலாளர் – நிர்வா கம், பிரதிப் பிரதம செயலாளர் – பொறியியல் ஆகியோரையும் உள்ளடக்கி விரைவில் கலந்துரை யாடல் நடத்தி இவை தொடர்பில் ஆராய்வதாக ஆளுநர் பதிலளித் தார்.

# ஆசிரியர் இடமாற்றப் பரிந்துரைகளை பின்பற்றததால் பாரிய பிரச்சினை

(எம்.ஏ.அமீனுல்லா )

ஆசிரியர் இடமாற்றச் சபைகள் முறையாக வழங்கிய ஆசிரியர் இடமாற்றப் பரிந்துரைகளுக்கு இணங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் அறிவித்திருந்த போதிலும், பல தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் அதற்கேற்ப செயற்படாததால் பல பாடசாலைகளில் பாரிய பிரச்சினைகள் உருவாகியுள்ளன என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

சில தேசிய பாடசாலைகளில் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை அதிபர்கள் விடுவிக்காததால், இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை கடமையில் ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இச்சூழலினால் புதிய பாடசாலை தவணை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், கல்வி அமைச்சின் அறிவிப்பை மீறி பணிபுரியும் அதிபர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் செயலாளர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சில தேசிய பாடசாலைகளில் 10 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய ஆசிரியர்கள் அதிபர்களுடன் இணைந்து பல்வேறு முறைகேடுகளை செய்து வருவதாகவும், இதன் காரணமாக அவர்களை பாடசாலைகளில் இருந்து விடுவிக்க அதிபர்கள் தயாராக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேசிய பாடசாலைகளில் கற்பிக்கும் சுமார் 9,000 ஆசிரியர்கள் கொண்ட குழு இம்முறை இடமாற்றங்களை எதிர்பார்த்து ஆசிரியர் இடமாற்ற சபைகளுக்கு கடிதங்களை சமர்ப்பி த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# மத்திய மாகாண ஆளுநர்-தேசிய கெடட் அதிகாரிகள் கலந்துரையாடல்

(எம்.ஏ.அமீனுல்லா)

மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபய கோன் மற்றும் தேசிய கெடட் படையின் அதிகாரிகள் குழுவிற்கும் இடையிலான கலந்துரையாடல் கண்டி ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மத்திய மாகாண பாடசாலைகளில் கெடட் துறையின் அபிவிருத்தி முகாமைத்துவம் மற்றும் அதனை பாதித்துள்ள பிரச்சினைகள் தொடர் பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தேசிய கெடட் படைத் தலைமையகம், படையணியின் செயலாளர் லெப்டினன்ட் கேணல் பிரதீப் ஜயசூரிய, மத்திய மாகாண பிரதிப் பணிப்பாளர் லெப்டினன்ட் கேணல் காமினி விக்கிரமகே, 11ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி ஜானக நவரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்த அரசின் ஆயுள் 5 ஆண்டுகளே சி.பி.ரத்நாயக்க தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா )

இந்த அரசாங்கத்தை கவிழ்க்க நாம் தயாராக இல்லை. ஐந்தாண்டுகளுக்கு முன் இந்த அரசு விழும்.அதன் சகுணங்களை இப்போதும் காணலாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சி.பி.ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் குண்டசாலை தொகுதி பிரதிநிதிகளுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட தலைவர் சி.பி. ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதிகள் குறித்து தற்போது விவாதங்கள் நடைபெற்று வருகிறது. அதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயாராகி வருகிறோம்.

உள்ளூராட்சி தேர்தலில் இளைஞர்களுக்கு 25மூ வாய்ப்பு அளிக்க வேண்டும். தற்போது இளைஞர்கள் கட்சியைச் சுற்றி திரண்டுள்ளனர். முகநூல்களில் போலி வேலை செய்தவர்கள் பற்றி இப்போது மக்களுக்குத் தெரியும்.

மக்கள் எமக்கு மூன்றில் இரண்டு பங்கு அதிகாரத்தை வழங்கிய போது எதிர்பாராத விதமாக கொரோனா தொற்று ஏற்பட்டது.அதே சமயம் பெரிய பொருளாதார மந்தநிலையையும் சந்திக்க வேண்டியிருந்தது. சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வரவில்லை. ஏற்றுமதி வருமானம் குறைந்திருந்தது எமது அரசாங் கத்திற்கு எதிராக சதிகள் தீட்டப் பட்டன. மக்கள் ஏமாற்றப் பட்டனர். இப்போது அவர்களுக்குப் புரிந்து விட்டது. கிராமத்தை உருவாக்கி நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக உள்ளூராட்சி தேர்தலில் கிராமம் அமைக்கும் அதிகாரம் எமக்கு கிடைக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

# கட்புல குறைபாடு போட்டிப்பரீட்சைகளில் 3 வீதம் விசேட ஒதுக்கீடு



(எஸ்.கீதபொன்கலன்)

எதிர்காலத்தில் நடத்த உள்ள கிழக்கு மாகாண மட்டப் போட்டிப் பரீட்சைகளில் கட்புல குறைபாடு உள்ளவர்களுக்கு மொத்த வெற்றிடங்களில் 3 வீதம் விசேடமாக ஒதுக்கப்படும்.

பரீட்சை வினாத்தாள்கள் இவர்களுக்கென விசேடமாக தயாரிக்கப்படும் என்று நேற்று (29) தம்மை சந்தித்த மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலன் அற்றோர் பாடசாலை மற்றும் மட்டக்களப்பு உதயம் விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் பிரதான நிர்வாகிகளுக்கு,கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்தன சேகர வாக்குறுதி அளித்தார்.

விழிப்புல குறைபாடுகள் உள்ள விசேட தேவைகள் குறித்து கலந்துரையாடுவதற்கென மட்டக்களப்பு மாவட்ட தரிசனம் மற்றும் உதயம் அமைப்புகளின் பிரதான நிர்வாகிகள் மாகாண ஆளுநரை திருகோணமலையில் சந்தித்த போதே ஆளுநர் மேற்படி வாக்குறுதியை வழங்கினார்.

இவ் கலந்துரையாடலின் போது பேசிய ஆளுநர்

ஏற்கனவே, நடந்து முடிந்த கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரிய போட்டிப் பரீட்சைக்கு தோற்றி, தெரிவு செய்யப்படாத,கட்புல குறைபாடு உடையவர்களுக்கு சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நியமனம் வழங்க முடியுமா என தாம் உரிய தரப்புகளுடன் ஆலோசிப்பதாகவும் கூறினார்.அத்துடன் சுயதொழிலில் ஈடுபடுவதற்கென அரச காணியை பெற்றுக்கொடுத்தல் மற்றும் நிதி வசதிகளை பெறுதல்,சங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கான வாகனம் ஒன்றை அரசு மூலம் பெறுதல் போன்றவற்றிற்கும் உரிய தரப்புகளுடன் கலந்துரையாடி உதவிகளை பெற ஆவன செய்வதாகவும் கூறினார்.

இக் கலந்துரையாடலில் தரிசனம் விழிப்புணர்வற்றோர் பாடசாலை யின் தலைவர் நா.இதய ராஜன், உபதலைவர் மு.தயானந்தன்,உதயம் விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் தலைவர் டி.தசாந்தன்,பொருளாளர் எம்.யதீஸ் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் எஸ். ராஜசேகரும் கலந்து கொண்டனர்.

# பிரதேச அபிவிருத்தியில் பங்களிப்பு: இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிகள்

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

செயற்பாடு, சமூகப் பங்களிப்பு ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட இளைஞர், யுவதிகளை மாற்று முகவர்களாக உருவாக்கும் திட்டத்தின் கீழ் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 40 இளைஞர், யுவதிகள் பல வேறுபட்ட பயிற்சிகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாக அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலு வூட்டல் நிறுவனத்தின் இளைஞர் அபிவிருத்தி வலுவூட்டல் செயல்திட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

இவ்வாறானா பயிற்சிநெறி கிரானில் ஆரம்பித்து வைக்கப் பட்டது. செயலமர்வில் தெரிவு செய்யப்பட்ட 40 இளைஞர், யுவதிகளோடு பிரதேச செயலக இளைஞர் அபிவிருத்தி உத்தி யோகத்தர், தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர், இளைஞர் சம்மேளன அலுவலர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

செயலமர்வில் வளவாளராகக் கலந்து கொண்ட அனுலா, இத்திட்டம் பற்றி மேலும் கூறியதா வது, கிரான் பிரதேச செயலாளர் பிரிவைப் பொறுத்தவரையில் அங்கு இளைஞர், யுவதிகளின் சமூகப் பங்கேற்பு குறைந்த மட்டத்திலேயே




காணப்பட்டது.

இந்த நிலைமை, பிரதேச அபிவிருத்தியில் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதால் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்து கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்கும் எமது திட்டத்தை விரிவு படுத்தியுள்ளோம்.

ஏற்கெனவே கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் காலநிலையை அடிப்படையாகக் கொண்ட சிசிஐஆர் செயல் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

அதற்கு மேலதிகமாக, இளை யோரை வலுவூட்டுவதன் மூலம் பிரதேச அபிவிருத்தி சிறப்படையும். தற்காலத்திலுள்ள தொழினுட்ப வளர்ச்சி, பொருளாதாரச் சிக்கல், கல்வி அடைவு மட்டம் என்பனவற் றிற்கு முகம் கொடுக்கும் வண்ணம் இளைஞர் யுவதிகளைத்தயார்படுத் திக் கொண்டு பிரதேசத் தின் ஒட்டு மொத்த அபிவிருத்தியை நோக்கிச் செல்வதே இதன் நோக்கமாகும்.

ஏனென்றால், இளையோர் சமுதாயத்தினரால் மட்டுமே சாதக மான சமூகநல மாற்றங்களைத் துரித கதியில் கொண்டு வர முடியும். ஆகவே அதிக சாதக மாற்றங்களைக் கொண்டு வரும் மனித வளமாகவும் மனித வலுவாகவும் இளைஞர் யுவதிகள் கருதப்படுகி றார்கள்.

அதனடிப்படையில், இளைஞர் கழகங்களை ஸ்தாபித் ததனைக் கொண்டு இந்த செயற் பாடுகளின் துவக்கம் ஆரம்பிக் கிறது. பங்குபெறும் இளைஞர் யுவதிகளுக்கு பல்வேறு செயற்திட் டப் பயிற்சிகளை வழங்கி அவர் களை அறிவு, ஆற்றல், செயற்பாடு மிக்கவர்களாக மாற்றுவுள்ளோம்.

செயற்பாட்டினூடாக வளர்ச்சி யைக் காணுதல் என்பது இதன் தொனிப் பொருளாகும். தொழி னுட்ப வளர்ச்சியின் காரணமாக தனி மனிதச் செயற்பாட்டுப் பொறி முறைக்குள் இளைஞர் யுவதிகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளார்கள்.

அத னால் சமூகப் பங்கேற்பு என்பது பின்னடைவை நோக்கிச் செல்கின்றது. இதனை அறிவூட்டி விழிப்புணர்வடையச் செய்வதும் இதன் நோக்கமாகும். தொடர்ச்சியான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும்.

# உக்குவளை டெங்கு கட்டுப்படுத்தல் செயற்திட்டம்



உக்குவளை மாருகோன பிரதேசத்திலுள்ள வீடுகளமைந்த சுற்றுபுறச் சூழல்களில் டெங்கு பற்றிய சோதனைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன

மாருகொன கிராம உத்தியோகத்தர் குணவர்தன தலைமையில் பிரதேச சுகாதார அதிகாரிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக நல அமைப்புடன் இணைந்து இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இச்சோதனையின்போது 295 வீட்டுச் சுற்றுபுறங்கள் சோதனையிட்டதில் 60 இடங்கள் டெங்கு நுளம்பு பரவக் கூடிய வாய்ப்பு அறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு மூவர் டெங்கு தொற்றாளர்கள் இனம்காணப்பட்டுள்ளதாகவும் அத்தோடு தத்தம் வீட்டு சுற்றுபுறச்சூழல்களை எப்போதும் துப்பரவாக வைத்துக்கொள்ளுமாறும் தவறுவோர்மீது நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் எச்சரித்துள்ளனர்.

# தலவாக்கலையில் ‘கிளீன் சிறிலங்கா’



(பி.கேதீஸ்)

தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் லிந்துலை மெரயா நகரில் சிரமதான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மெராயா நகரில் வீதிகளில் வீசப்பட்டிருந்த பிளாஸ்டிக், பொலித்தீன் மற்றும் பல்வேறு கழிவுகள் அகற்றப்பட்டன.மேலும் வடிகான்கள் சுத்தம் செய்யப்பட்டன. பாடசாலை மாணவர்கள் மற்றும் நகரவாசிகளுக்கு கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துவது குறித்து விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அக்கரப்பத்தனை உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள், ஊழியர்கள், லிந்துலை பொலிஸ் உத்தியோகத்தர்கள், லிந்துலை சுகாதார மற்றும் வைத்திய அலுவலக அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மெராயா பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மகா கும்பமேளா:

# நெரிசலில் சிக்கி 31 பேர் உயிரிழப்பு: 70க்கும் மேற்பட்டோர் படுகாயம்

## பிரதமர் மோடி மீட்பு நடவடிக்கைக்கு உத்தரவு

வட இந்தியாவில் நேற்று புதன்கிழமை மவுனி அமாவாசை என்பதால் உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட அதிகளவில் பக்தர்கள்





திரண்டிருந்த நிலையில் கூட்ட நெரிசல் ஏற்பட்ட நிலையில் குறித்த நெரிசலில் சிக்கி 31 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 70க்கும் மேற்பட்டோர் காயடைந்துள்ளதாகவும் அங்கு சிகிச்சையில் ஈடுபட்டுள்ள மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மீட்பு பணிகளை துரித கதியில் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை உத்தர பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்திடம் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் தொலைபேசியில் நிலவரம் குறித்து கேட்டறிந்ததுடன் பிரதமர் ஒரு மணி நேரத்துக்குள் இரண்டு முறை யோகி ஆதித்யநாத்திடம் குறித்த அனர்த்தம் தொடர்பில் உரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத், சங்கம் காட் பகுதியின் முகத்துவாரத்தை தவிர்க்குமாறு பக்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹிந்தியில் அவர் பகிர்ந்த அந்த சமூகவலைதளப் பகிர்வில், “அன்பான பக்தர்களே பிரயாக்ராஜுக்கு வாருங்கள், கங்கையில் நீராடுங்கள், சங்கம் காட் முகத்துவாரம் நோக்கிச் செல்ல முயற்சிக்காதீர்கள். நீங்கள் அனைவரும் நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஒத்துழையுங்கள். சங்கத்தின் அனைத்து இடங்களிலும் மக்கள் நிம்மதியாக புனித நீராடி வருகின்றனர். எந்த வதந்திகளையும் நம்ப வேண்டாம்” என பிதிவிட்டுள்ளார்.




பெண்கள் நலத்திட்டம்:

# 15இலட்சம் கடன் வழங்க தமிழக அரசு நடவடிக்கை



தமிழ்நாடு பிற்படுத் தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சார்பாக குழுக்கடன் 15 இலட்சம் வரை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுவில் உறுப்பினராக உள்ள மகளிர் மற்றும் ஆடவருக்கு குழுக்கடன் வழங்கப்படுகிறது. குழு உறுப்பினர்கள் ஒருவருக்கு அதிகப்பட்சம் ரூ. 1.25 இலட்சம் வழங்கப்படும். இதற்கு ஆண்டு வட்டி 6 சதவீதம் ஆகும்.

அத்துடன் கடனை திரும்ப செலுத்தும் காலம் 2 1/2 ஆண்டுகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் மட்டும் இருக்க வேண்டும். குழு ஆரம்பித்து 6 மாதங் கள் பூர்த்தியாகிருந்தால் மட்டுமே கடனுக்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த கடனைப்பெற மேலும் பல சட்டதிட்டங்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரோ 100 ;

# விண்ணில் நிறுத்தப்பட்டது என்விஎஸ்-02 செயற்கைக்கோள்



என்விஎஸ்-02 செயற்கைக்கோள் வெற்றிகரமாக சீறிப் பாய்ந்தது விண்ணில் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இஸ்ரோவின் 100ஆவது ரொக்கெட் இது நேற்றுக்காலை 6.23 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி நிலையத்திலிருந்து விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. விண்ணில் செலுத்தப்பட்ட 19ஆவது நிமிடத்தில் செயற்கைக்கோளை புவியின் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டதாக ஆய்வு நிலையம் மேலும் குறிப்பிட்டது.

தரை, கடல் மற்றும் வான்வழி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பயன்பாட்டுக்கு உதவும் ‘இந்திய மண்டல வழிகாட்டுதல் செயற்கைக்கோள் அமைப்பு ஒன்றை உருவாக்க இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) முடிவு செய்தது.

இதற்காக ஐஆர்என்எஸ்எஸ் வரிசையில் 2013 முதல் 2018ஆம் ஆண்டு வரையான காலகட்டங்களில் 8 வழிகாட்டுதல் செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன. இதன்மூலம் இந்தியாவுக்கு பிரத்தியேக வழிகாட்டியாக நாவிக் தொழில்நுட்பம் வடிவமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இந்த நாவிக் மூலம்தான் இந்தியாவின் கண்காணிப்பு பணிகள் இப்போது சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் புகாருக்காக மரண தண்டனை கொடுத்தவர் பிரபாகரன்

## சீமானை பரிந்துரைத்திருப்பாரா? கொளத்தூர் மணி கேள்வி

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை ஈழத்துக்கு அனுப்பிய பிழைக்கு நான் ஒருவிதத்தில் பொறுப்பேற்கிறேன். சமூக அக்கறையுள்ள, தமிழ் உணர்வுமிக்க பல இலட்சம் இளைஞர்கள் இன்று ஏமாந்து நிற்பது போல அன்று சீமானால் நானும் ஏமாந்திருக்கிறேன் என்பதற்காக வருந்துகிறேன்; பாலியல் ஒழுக்கக்கேடு புகாருக்காக தமது மெய்க்காவல் படை தலைவருக்கே மரண தண்டனை கொடுத்த பிரபாகரன் தமக்கு அடுத்ததாக சீமானை பரிந்துரைத்தார் என்பது பச்சை பொய் என்கிறார் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி.

சன் நியூஸ் கேள்வி களம் நிகழ்ச்சியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி தா.செ.மணி கூறியதாவது:

என்னுடைய பரிந்துரையின் பேரில் சீமான் ஈழத்துக்கு சென்றார் என்பது அல்ல.. பரிந்துரைத்தது வேறு ஒருவர்தான். என்னிடம் விடுதலைப் புலிகள் கருத்து கேட்ட போது, எங்கள் திராவிடர் இயக்க மேடைகளில் தொடர்ந்து பேசி வருகிறார்; நம்ம கருத்துக்கு ஆதரவானவர்தான் என்று சொன்னது உண்மைதான். பிரபாகரனுடனான சந்திப்புக்காக பேசுகிற போதும் இதைத்தான் நான் சொன்னேன். அந்த கால கட்டத்தில் சீமான் அப்படித்தான் இருந்தார். தற்போது சீமான் பேசுகிற பொய்கள் பொருத்தம் இல்லாதவை. பொய்யை சொன்னாலும் பொருந்த சொல்லுங்கடா போக்கத்தா பசங்களா.. என்கிற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல் போலத்தான் சீமான் பேசுவதும்..

**பாலியல் ஒழுக்கக்கேட்டுக்கு மரண தண்டனை தந்த பிரபாகரன்**

பிரபாகரனுக்கு அடுத்ததாக இருப்பவர் அவர் விரும்பிய கொள்கைகளை கொண்டிருப்பதுடன் பிரபாகர்ன் விரும்பிய நடத்தைகளையும் கொண்டிருக்க வேண்டும். 1989-ல் இந்திய அமைதிப்படை அங்கு இருந்த காலத்தில் ஈழத்துக்கு நான் சென்றிருந்தேன்.



அப்போது பிரபாகரன் இறந்துவிட்டதாக செய்திகள் வெளியாகின. நல்வாய்ப்பாக பிரபாகரனை சந்திக்க அழைப்பு வந்தது. அப்போது பிரபாகரனை நாங்கள் சந்தித்து பேசுகிற போது, எனக்கு நெருக்கமான 3 புலிகள் இயக்க தோழர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரித்தார்.

குறிப்பாக அவர் முதலில் சொன்னது தமது மெய்க்காவல் படைக்கு தலைவராக இருந்த தியாகு என்பவருக்கு பாலியல் ஒழுக்கக் கேட்டுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டதைத்தான்.

விடுதலைப் புலிகள் அவ்வாறான ஒழுக்க நெறிகளைக் கொண்டவராகவே அறியப்பட்டனர் என்றார்.

# புகையிரத நிலையத்தில் 6வயது சிறுவன் கடத்தல்

## ஆந்திர பெண்கள் ஐவர் கைது

சென்னை சென்ரல் புகையிரத நிலையத்தில் அசாம் மாநிலத்தைச் சேர்ந்த சஜிதா பேகம் என்பவரின் 6 வயது மகன் சபீக் உதீன் என்பவர் மாயமானார்.. இதில் சிசிடிவி கமராக்களை ஆய்வு செய்த பொலிஸ ார் கடத்தி சென்றவர்களை தனிப்படை அமைத்து தேடிவந்த நிலையில் 14 நாட்களின் பின்னர் குண்டூரில் வைத்து சிறுவனை மீட்டனர். குறித்த கடத்தல் சம்பவத்தில் ஆந்திர பெண்கள் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்கள் குறித்த பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.



அதாவது அசாம் மாநிலத்தை சேர்ந்த சஜிதா பேகம், தன்னுடைய 6 வயது மற்றும் 3 வயது மகன்களுடன் கடந்த ஜனவரி 12ஆம் திகதி சென்னைக்கு வந்தார். பிழைப்புத் தேடி பயணித்து வந்த சஜிதா பேகம், சென்னையில் உள்ள காய்கறி கடையில் வேலைக்கு சேர்வதற்காக சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வந்தார். ஆனால் சென்னை சென்ரல் ரயில் நிலையத்தில் சிறிது நேரத்திலேயே சஜிதா பேகமின் 6 வயது மகன் சகிப் உதீன் திடீரென மாயமானார். இதுகுறித்து, சஜிதா உடனடியாக சென்ட்ரல் புகையிரத நிலையத்தில் புகார் அளித்ததையடுத்து அந்த புகாரின் பேரில் சென்ட்ரல் புகையிரத பொலிஸ ார் வழக்குபதிவு செய்து தனிப்படைகள் அமைத்து விசாரித்தனர்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலைய இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ் தலைமையிலான பொலிஸார், ரயில் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கமரா பதிவுகளை ஆய்வு செய்தார்கள்.

அப்போது, சிறுவன் சகிப் உதீனை 5 பெண்கள் கடத்தி சென்றது தெரியவந்தது. இந்நிலையில் குறித்த பெண்களை பொலிஸார் தீவிரமாக தேடி வந்த நிலையில் 14 நாட்களின் பின்னர் கடந்த 26ஆம் திகதி ஆந்திர மாநிலம், குண்டூர் மாவட்டம் நரசராவ்பேட்டை அருகே சிறுவனை பொலிஸார் பத்திரமாக மீட்டனர்.

# வெள்ளிப்பட்டறை தொழிலாளி.. மனைவி மகளுடன் தற்கொலை

## உருக்கமான கடிதம் மீட்பு

சேலத்தில் கடன் தொல்லை காரணமாக வெள்ளிப் பட்டறை தொழிலாளி மனைவி மற்றும் மகளுடன் தூ க்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கடன் வாங்கி புது வீடு கட்டி ஒரு ஆண்டு கூட ஆகாத நிலையில், அதற்கான கடனை கட்ட முடியாததால் இந்த சோக முடிவை எடுத்துள்ளார். அவர் உருக்கமாக எழுதிய தற்கொலை கடிதமும் சிக்கியுள்ளது.



சேலம் மாவட்டம் அரிசிபாளையம் அருகே முத்தையாள் தெருவை சேர்ந்தவர் பால்ராஜ் மொத்தமாக வெள்ளிக் கட்டிகளை வாங்கி, கொலுசு, மோதிரம், கொடி உள்ளிட்ட பொருட்களை செய்து கொடுத்து வந்தார். இந்த நிலையில், பால்ராஜ் கடந்த ஆண்டு புதிதாக ஒரு வீடு கட்ட ஆரம்பித்த நிலையில் அற்காக கடன் வாங்கியாவது வீடு கட்டிவிட வேண்டும் என்று நினைத்தார்.

இதற்காக தனியார் வங்கி மட்டும் இன்றி தனக்கு தெரிந்த சிலரிடமும் இலட்சக்கணக்கில் பணம் கடன் வாங்கியிருக்கிறார். கடந்த ஆண்டு வீட்டை கட்டி முடித்துவிட்டார். நாட்கள் செல்ல செல்ல வெள்ளிப் பொருட்களுக்கான தேவை குறைந்ததையடுத்து போதிய வருமானம் இல்லாமல் பால்ராஜ் தவித்து வந்தார். இதனால் வாங்கிய கடனை கட்ட முடியாமல் இருந்தாக கூறப்படுகின்றது.

கடன் கொடுத்தவர்களும் பால்ராஜிடம் வந்து பணத்தை கேட்டு சென்று இருக்கின்றனர். இதனால் பால்ராஜ் மிகுந்த மனக்கவலை அடைந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையிலேயே பால்ராஜ் அவரது குடும்பத்தாருடன் சேர்ந்து தற்கொலை செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து அங்கிருந்து கடிதம் ஒன்று கிடைத்ததாக கூறப்படுகிறது. அதில் “நான் அளவுக்கு அதிகமாக கடன் வாங்கிவிட்டேன். இதனை திருப்பி செலுத்த முடியவில்லை. இதனால் நாங்கள் தற்கொலை செய்துகொள்கிறோம்” என்று எழுதியிருந்ததாக கூறப்படுகின்றது.

# கனடா–இந்தியா உறவில் விரிசல்



கனடாவின் தேர்தல்களில் சில வெளிநாட்டு அரசாங்கங்கள் தலையிடுவதாக எழுந்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணையம் தனது அறிக்கையை தாக்கல் செய்தது. அதில் இந்தியா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது.இதனை இந்தியா திட்டவட்டமாக மறுத்த காரணத்தால் இரு நாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், கனடா தேர்தலில் வெளிநாட்டு தலையீட்டில் 2ஆவது மிகவும் சுறுசுறுப்பான நாடாக இந்தியா உள்ளது. இந்தியா உலக அரங்கில் ஒரு முக்கியமான நாடாக உள்ளது. கனடாவும், இந்தியாவும் பல தசாப்தங்களாக ஒன்றாக வேலை செய்துள்ளன. ஆனால் இரு நாடுகள் உறவில் சவால்கள் உள்ளன. நாங்கள் நீண்ட காலமாக இந்தியாவின் வெளிநாட்டு தலையீடு நடவடிக்கைகள் குறித்து தெரிவித்து வருகிறோம் என தெரிவித்துள்ளது.

கனடாவில் வசித்து வந்த காலிஸ்தான் அமைப்பு தலைவர் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா குற்றம் சாட்டியது. இதை இந்தியா திட்டவட்டமாக மறுத்த காரணத்தால் இரு நாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால், இந்தியா குறித்த கனடா அறிக்கையின் குற்றச்சாட்டுகளை நாங்கள் நிராகரிக்கிறோம். தலையீடு என்று கூறப்படும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை நாங்கள் பார்த்தோம். உண்மையில் இந்தியாவின் உள் விவகாரங்களில் கனடா தொடர்ந்து தலையிட்டு வருகிறது. அவர்கள் தான் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார்.

# விசேட இராஜினாமா திட்டம்:
## ட்ரம்ப் நிர்வாகம் காலக்கெடு



கூட்டாட்சி பணியாளர்களின் அளவை கணிசமாகக் குறைக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம், அலுவலகத்தில் பணிக்குத் திரும்ப விரும்பாத அனைத்து ஊழியர்களுக்குமான விசேட இராஜினாமா திட்டத்தை வெளியிட்டது. அமெரிக்க பணியாளர் மேலாண்மை அலுவலகம், செவ்வாய்க்கிழமை (28) இது குறித்து மில்லியன் கணக்கான ஊழியர்களுக்கு அனுப்பிய ஒரு மின்னஞ்சலில் இந்த திட்டத்தை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

இந்த அறிவிப்பின்படி, கூட்டாட்சித் தொழிலாளர்கள் பெப்ரவரி 6 ஆம் திகதிக்குள் இராஜினாமா செய்தால், அவர்கள் செப்டம்பர் வரை எட்டு மாத ஊதியம் மற்றும் பலன்களைப் பெறுவார்கள். அதேநேரம், இதில் பங்கேற்பதா என்பதை முடிவு செய்ய மத்திய அரசு ஊழியர்களுக்கு பெப்ரவரி 6 வரை அவகாசம் அளித்துள்ளது. 10% ஊழியர்கள் இந்த வாய்ப்பை ஏற்றுக்கொள்வார்கள் என ட்ரம்ப் நிர்வாகம் எதிர்பார்க்கிறது. மூத்த அதிகாரிகள் இந்த திட்டமானது அரசாங்கத்திற்கு 100 பில்லியன் டொலர் வரை சேகரிக்க உதவும் என தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் குடிவரவு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான பதவிகளில் உள்ளவர்கள் மற்றும் அமெரிக்க தபால் சேவையில் பணிபுரிபவர்கள் தவிர குடிமக்கள் பணியாளர்களை இந்த சலுகை உள்ளடக்கியது. குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது அரசியல் முன்னுரிமைகளுக்கு இணங்க அமெரிக்க கூட்டாட்சி அரசாங்கத்தை சுருக்கவும், சுத்தப்படுத்தவும் மற்றும் மறு உருவாக்கவும் முன்னெடுக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேட்கொள்ளப்பட்டுள்ளது.




# கொலம்பியர்களை திருப்பி அனுப்பியது அமெரிக்கா

கொலம்பியாவைச் சேர்ந்த பலரை அமெரிக்க இராணுவ விமானம் மூலம் சொந்த நாட்டுக்கு அமெரிக்கா அனுப்பி வைத்தது. இதற்கு கொலம்பிய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதையடுத்து கொலம்பியா மீது கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் எச்சரித்தார். இதற்கிடையே அமெரிக்க விமானங்களில் திருப்பி அனுப்பப்படும் குடிமக்களை ஏற்க கொலம்பியா முன்வந்தது. இதனால் மோதல் முடிவுக்கு வந்து இரு நாடுகள் இடையே மீண்டும் விமான சேவை ஆரம்பித்துள்ளது. அமெரிக்காவில் இருந்து கொலம்பிய மக்களை அழைத்து வர 2 இராணுவ விமானங்களை கொலம்பிய அரசு அனுப்பியது. அந்த விமானங்கள், 200 இற்கும் மேற்பட்ட கொலம்பியாவை சேர்ந்த புலம் பெயர்ந்தவர்களை ஏற்றிக் கொண்டு தலைநகர் போகோட்டாவை சென்றடைந்தது.

# அமெரிக்க உதவியில் முடக்கம்:
## தாய்லாந்து அகதிகள் முகாம்கள் பாதிப்பு

USAID
FROM THE AMERICAN PEOPLE




தாய்லாந்து அகதி முகாம்களில் உள்ள கள மருத்துவமனைகள் அமெரிக்க வெளிநாட்டு உதவி நிறுவனமான யுஸ் எய்ட் இடைநிறுத்தப்பட்டதால் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளன.

ட்ரம்ப் கடந்த வாரம் தனது “அமெரிக்கா ஃபர்ஸ்ட்” கொள்கையுடன் பொருந்தக்கூடிய தன்மையை மதிப்பிடுவதற்காக சர்வதேச மேம்பாட்டுக்கான யு.எஸ் ஏஜென்சியின் வளர்ச்சி உதவியை 90 நாட்களுக்கு இடைநிறுத்தினார். இது உலகெங்கிலும் உள்ள உதவிக் குழுக்களிடையே பாதிப்பினை தூண்டியுள்ளது.

தாய்லாந்து போர் வலயங்களில் கண்ணிவெடி அகற்றுதல் மற்றும் எச்.ஐ.வி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட மில்லியன் கணக்கானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மருந்துகள் ஆகியவை இதன் மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மனிதாபிமான அமைப்புக்கள் மற்றும் ஐ.நா. ஏஜென்சிகளின், முடக்கம் நிரந்தரமாகிவிட்டால் உணவு, தங்குமிடம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றை விநியோகிக்கும் திறனில் கடுமையான தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. உலகளாவிய மனிதாபிமான உதவிக்கு அமெரிக்கா மிகப் பெரிய பங்களிப்பாளராக உள்ளது, 2024 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட $13.9 பில்லியனை வழங்குகிறது, இது ஐக்கிய நாடுகள் சபையால் கண்காணிக்கப்படும் அனைத்து உதவிகளிலும் 42% ஆகும். மியான்மாரில் இருந்து சுமார் 100,000 அகதிகளுக்கு தங்குமிடம் வழங்கும் தாய்லாந்தில் உள்ள முகாம்களில் உள்ள சிகிச்சை மையங்கள், சர்வதேச மீட்புக் குழுவிற்கு அமெரிக்கா நிதியுதவியை முடக்கியதை அடுத்து மூட உத்தரவிடப்பட்டதாக மூத்த உதவி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

அவசர உணவு உதவி உட்பட சில பகுதிகளில் முடக்கத்திற்கு விலக்கு அளிப்பதாக வொஷிங்டன் தெரிவித்தது. பங்களாதேஷில் தஞ்சமடைந்திருக்கும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான ரோஹிங்கியா அகதிகளுக்கு அவசரகால உணவு உதவிக்கு அமெரிக்கா விலக்கு அளித்துள்ளதாக பங்களாதேஷ் அரசாங்கம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஆனால் மற்ற மனிதாபிமான நிகழ்ச்சிகளுக்கு விதிவிலக்கு பொருந்தாது. பங்களாதேஷை தளமாகக் கொண்ட தங்குமிடங்களில் பணிபுரியும் அமைப்புகளால், அகதிகளுக்கான வீடுகளை கட்டுவதற்கும் சரிசெய்வதற்கும் புதிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியாது.

உலகெங்கிலும் உள்ள எச்.ஐ.வி, மலேரியா மற்றும் காசநோய்க்கான உயிர்காக்கும் மருந்துகளின் விநியோகத்தையும் இத் தடைகள் பாதிக்கும், இவ் மனிதாபிமான உதவிகளில் மில்லியன் கணக்கான மக்கள் சார்ந்துள்ளனர் என மற்றொரு குறிப்பேடு தெரிவிக்கிறது. செவ்வாய்க்கிழமையன்று, யுஸ் எய்ட் (USAID) உடன் பணிபுரியும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பங்குதாரர்கள் உடனடியாக வேலையை நிறுத்தப்படுவதற்கு பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டீப்சீக்கின் பாதுகாப்பு தாக்கங்களை
## மதிப்பிடும் அமெரிக்கா!




சீன செயற்கை நுண்ணறிவு (AI) செயலியான டீப்சீக் இன் (DeepSeek) தேசிய பாதுகாப்பு தாக்கங்களை அமெரிக்க அதிகாரிகள் கவனித்து வருவதாக வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் செவ்வாய்க்கிழமையன்று (29) தெரிவித்தார்.

சாத்தியமான பாதுகாப்பு மற்றும் நெறிமுறைக் கவலைகள் காரணமாக டீப்சீக்கினைப் பயன்படுத்துவதற்கு அமெரிக்க கடற்படை தடை விதித்துள்ளதாக செய்திகள் வந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளி வந்துள்ளது.

இதனிடையே, டீப்சீக் தொழில்நுட்பத்தை பயனாளர்கள் எடுத்துக்கொள்வதைத் தடுக்க அமெரிக்க அரசாங்கத்துடன் நெருக்கமாக பணியாற்றி வருவதாக சட்ஜிபிரி தயாரிப்பாளரான ஓபன் ஏஐ உறுதியளித்துள்ளது.

இந்த வார தொடக்கத்தில், மலிவான மற்றும் சக்திவாய்ந்த டீப்சீக் ஏஐ செயலி அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்குகளில் சரிவை ஏற்படுத்தியது. டீப்சீக் குறைந்த செலவில் அதிக திறன் கொண்டதாக இருப்பதால், அமெரிக்க நிறுவனங்களுக்கு கடும் சவாலாக அமைந்துள்ளது.

டீப்சீக் நிறுவனம் 2023 ஆம் ஆண்டில் லியாங் வென்ஃபெங் என்பவரால் உருவாக்கப்பட்டது. அவர் ஒரு குவாண்ட் ஹெட்ஜ் ஃபண்ட் தலைவர் ஆவார். இந்த நிறுவனம் டீப்சீக் R1 மற்றும் R1 ஜீரோ என்ற இரண்டு AI மாதிரிகளை உருவாக்கியுள்ளது. R1 மாதிரி தற்போது பயன்பாட்டில் உள்ளது. R1 ஜீரோ இன்னும் பயன்பாட்டுக்கு வரவில்லை.

ஆனால், அது தானாகவே கற்றுக்கொள்ளும் திறன் கொண்ட ஒரு மேம்பட்ட AI செயலியாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த AI மாதிரியைஉருவாக்க வெறும் 6 மில்லியன் டொலர்கள் மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. இது அமெரிக்க நிறுவனங்கள் செலவு செய்த தொகையை விட மிகவும் குறைவு. டீப்சீக்கின் முக்கிய அம்சம் என்னவென்றால், இது இலவசமாக கிடைக்கிறது. சட்ஜிபிரி மற்றும் ஜெமினி போன்ற ஏஐ மாதிரிகள் இலவசமாக கிடைக்கின்றன. ஆனால், அவை பழைய பதிப்புகள் மட்டுமே. புதிய அம்சங்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால், டீப்சீக் அனைத்து அம்சங்களையும் இலவசமாக வழங்குகிறது.

# தோட்டாக்களுக்கு அஞ்சாமல் மைதானத்தில் இறங்கும் ஆப்கானிஸ்தான் பெண்கள்






ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னர் பெண்கள் கிரிக்கெட் விளையாடுவதற்கு தடைவிதித்தனர். அதன் பின்னர் ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணியினர் தப்பி சென்று அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் வீராங்கனைகளைக் கொண்ட ஆப்கான் மகளிர் கிரிக்கெட் அணிக்கும், எல்லைகளற்ற கிரிக்கெட் அணிக்கும் இடையிலான போட்டி இன்று மெல்பர்னில் நடைபெறுகிறது. பெண்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்றும், எந்த காரணத்திற்காகவும் மைதானங்களுக்குள் செல்லக் கூடாது என்றும், இந்த உத்தரவுகளை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று தலிபான்கள் கூறியுள்ள நிலையில், ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட் வீரர்கள் தோட்டாக்களுக்கு அஞ்சாமல் மைதானத்தில் இறங்க முடிவு செய்துள்ளனர். 2021 ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர்,மகளிர் கிரிக்கெட் அணி உறுப்பினர்கள் தங்கள் தாயகத்தை விட்டு வெளியேறிய பிறகு, ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகள் கிரிக்கெட்டில் தோன்றுவது இதுவே முதல் முறை. மகளிர் ஆஷஸ் டெஸ்டின் தொடக்க நாளுக்கு முன்பு இந்தப் போட்டி நடைபெறும். அதன் பிறகு அவுஸ்திரேலியா இங்கிலாந்துடன் பகல்-இரவுப் போட்டியில் மோதும். ஆப்கானிஸ்தான் மகளிர் அணிக்கு இது ஒரு முக்கியமான படியாகும் என்று கிரிக்கெட் அவுஸ்திரேலியா தலைமை நிர்வாக அதிகாரி நிக் ஹாக்லி கூறுகிறார். இந்தப் போட்டி முக்கியமான உரையாடல்களைத் தூண்டி, இறுதியில் அணியைச் சர்வதேச அரங்கில் பங்கேற்க வழிவகுக்கும் என்று அவர் நம்புவதாகக் கூறினார்.

# சர்வதேச கிரிக்கெட் (ஐசிசி) தலைமை நிர்வாகி பதவி விலகல்

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உள்ள நிலையில், சர்வதேச கிரிக்கெட் நிர்வாக (ஐசிசி) தலைமை நிர்வாகி பதவியில் இருந்து விலகுவதாக முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் ஜெஃப் அலார்டிஸ் (Geoff Allardice) அறிவித்துள்ளார்.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக ஐசிசியில் கடமையாற்றும் 57 வயதான அவர், உலகளாவிய கிரிக்கெட்டில் குறிப்பிடத்தக்க சாதனைகளை மேற்கொண்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் கிரிக்கெட் செயல்பாட்டு மேலாளராக பணியாற்றிய பின்னர், 2012 ஆம் ஆண்டு ஐசிசியில் கிரிக்கெட் பொது முகாமையாளராக சேர்ந்தார்.

அவர் செயல் தலைமை நிர்வாக அதிகாரியாக எட்டு மாதங்கள் பணியாற்றியதைத் தொடர்ந்து நவம்பர் 2021 இல் ஐசிசி தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

தனது பதவிக் காலம் குறித்து பேசிய அலார்டிஸ்,

சர்வதேச கிரிக்கெட் நிர்வாகத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக பணியாற்றுவது ஒரு பாக்கியம்.

மேலும் கிரிக்கெட்டின் உலகளாவிய அணுகலை மேம்படுத்துவதில்



இருந்து வணிக அடித்தளம் வரை நாங்கள் அடைந்த முடிவுகளைப் பற்றி நான் நம்பமுடியாத அளவிற்கு பெருமைப்படுகிறேன். கடந்த 13 ஆண்டுகளாக ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்காக ஐசிசி தலைவர், இயக்குநர்கள் குழு மற்றும் ஒட்டுமொத்த கிரிக்கெட் சமூகத்திற்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

இது சரியான நேரம் என்று நான் நம்புகிறேன். நான் பதவி விலகவும், புதிய சவால்களைத் தொடரவும் கிரிக்கெட்டுக்கு உற்சாகமான காலங்கள் உள்ளன.

மேலும் எதிர்காலத்தில் ஐசிசி மற்றும் உலகளாவிய கிரிக்கெட் சமூகம் வெற்றிபெற வாழ்த்துகிறேன் என்று கூறியுள்ளார். இதேவேளை, ஐசிசி சபையின் சார்பாக, தலைமை நிர்வாகியாக இருந்தபோது அலார்டிஸின் தலைமை மற்றும் அர்ப்பணிப்புக்கு மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என்று சர்வதேச கிரிக்கெட் நிர்வாகத்தின் தலைவர் ஜெய் ஷா தெரிவித்துள்ளார். அவரது முயற்சிகள் உலக அளவில் கிரிக்கெட்டை முன்னேற்றுவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. நாங்கள் அவரது சேவைக்கு உண்மையிலேயே நன்றியுள்ளவனாக இருப்பதோடு, அவருடைய எதிர்கால முயற்சிகளில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன் என்றும் ஜெய் ஷா கூறினார்.

ஐசிசி இப்போது அலார்டிஸின் வெற்றிடத்துக்கு அடுத்த நபரை தேர்வு செய்வதற்கான பணிகளை ஆரம்பிக்கும்.

இது இவ்வாறிருக்க கிரிக்கெட் நாட்காட்டியில் ஒரு முக்கியமான நிகழ்வான வரவிருக்கும் எட்டு அணிகள் பங்கேற்கும் 2025 சம்பியன்ஸ் கிண்ணம் பெப்ரவரி 19 முதல் மார்ச் 9 வரை நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# நெய்மருடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது சவுதி



சவுதி உதைப்பந்தாட்டத்தின் மிக முக்கிய கழகங்களில் ஒன்றான அல் ஹிலால், ஒரு காலத்தில் உலகின் சிறந்த வீரர்களில் ஒருவராக புகழப்பட்ட ஸ்ட்ரைக்கர் நெய்மருடனான ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.

இந்த முடிவுடன், நெய்மரை மீண்டும் ஒப்பந்தம் செய்ய பிரேசிலிய கழகமான சாண்டோஸ் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. 32 வயதான பிரேசில் சர்வதேச வீரர் தனது வாழ்க்கையைத் தொடங்கிய கழகத்தில் குறுகிய கால ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெய்மருக்கு நெருக்கமான வட்டாரங்களின்படி, அல்-ஹிலாலில் அவரது ஒப்பந்தம் முடிவடைந்தது மிகப்பெரிய நடவடிக்கையாக கருதப்பட்டது.

2023 ஆகஸ்ட்டில் அல் ஹிலால் கழகத்துடன் 77.6 மில்லியன் பவுண்ட் ஒப்பந்தத்தில் இணைந்ததிலிருந்து 32 வயதான நெய்மர் ஏழு போட்டிகளில் மாத்திரமே விளையாடிள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




சுற்றுலா அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கும் இலங்கைக்கும் இடையிலான வோர்ன்-முரளி டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று காலை 10 மணிக்கு காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கை கலாசாரத்தை வெளிப்படுத்தும் டெஸ்ட் கிண்ணத்தின் வெளியீடு நேற்று காலி மைதானத்தில் நடைபெற்றது.

# பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ணம்: தெற்கு(கிரான்) பிரதேச செயலகம் வெற்றி





(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் "பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டியின்" அரையிறுதி மற்றும் இறுதி போட்டி நிகழ்வுகள் செவ்வாய்கிழமை(28) மாலை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கோறளைப்பற்று தெற்கு(கிரான்) மற்றும் கோறளைப்பற்று வடக்கு(வாகரை) ஆகிய பிரதேச செயலகங்கள் போட்டியிட்டதுடன், கோறளைப்பற்று தெற்கு(கிரான்) பிரதேச செயலகம் 2025 ஆம் ஆண்டின் பிரதேச செயலாளர் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 30ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.